இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 04 | திகதி : 08.03.2020 | விலை : 30.00


## மனமாற்றம் அவசியமானது மட்டுமல்ல மிகவும் அவசரமானதுமாகும் -திருத்தந்தையின் தவக்காலச் செய்தி



எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள இவ் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் மனமாற்ற வாழ்வு எம் எல்லாருக்கும் அவசியமானதொன்று என்பதை நாம் அறிந்திருந்தாலும் அது மிக அவசரமானது, உடனடியாகச் செய்யப்பட்டவேண்டியது, பின்போட முடியாதது என்று தெரிவித்துள்ளார்.

இறைவனோடு ஒப்புரவாகுங்கள் (2கொரி 5:20) என்ற கருப்பொருளில் திருத்தந்தை விடுத்துள்ள தவக்காலச் செய்தியின் சுருக்கத்தை 3ம் பக்கத்தில் காணலாம்.

## முன்னாள் முதலமைச்சர் - யாழ். ஆயர் சந்திப்பு



வடக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை கடந்த மார்ச் 02ம் திகதி ஆயர் இல்லத்தில் சந்தித்தார். இச் சந்திப்பின்போது வடக்கின் சமகால அரசியல் நிலைமை பற்றியும் அமையவிருக்கும் தேர்தல்கள நிலவரம் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

## அல்லைப்பிட்டி சர்வதேசப் பாடசாலைக் கட்டடப் பணிகளை அவதானித்தார் யாழ்.ஆயர்



அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள மொன்பேர்ட் சபை அருட்சகோதரர்களால் நிர்மாணிக்கப்பட்டுவரும் சர்வதேச ஆங்கிலப் பாடசாலைக்கான கட்டடப் பணிகளை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கடந்தவாரம் நேரில் சென்று பார்வையிட்டார் அவருடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் அவர்களும் கூட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மரியாயின்சேனை ஆச்சேஸ் விழா



மரியாயின் சேனை ஆச்சேஸ் விழா மார்ச் முதலாம் திகதி யாழ் மரியன்னை பேராலயத்தில் சிறப்பாக இடம்பெற்றது. "என் அரசியே, என் தாயே! நான் முழுவதும் உமக்கே சொந்தம்" என்னும் அர்ப்பண வாக்குறுதியை பிறசீடியங்களாகப் புதுப்பித்துக்கொண்டார்கள்.

மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி எம்.றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அருட்பணியாளர்கள் எம்.வி.இ.இரவிச்சந்திரன் மற்றும் எஸ்.ஸ்ரீபன் அடிகளார் கருத்துரை நிகழ்த்தினார்கள். இதில் பெரும் எண்ணிக்கையில் ஊழிய, உதவி அங்கத்தவர்கள் பங்கேற்றனர்.

## திருக்குடும்ப சபையின் 200வது ஆண்டு நிறைவின் நினைவாக "மாற்றத்திற்கான இளையோர் செயல்திட்டம்"



திருக்குடும்ப சபை நிறுவுனர் அருட்திரு பீற்றர் பியன்வெனு நோ ஆய் அவர்களால் பிரான்சில் 1820ல் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டு 2020ல் 200வது (1820 - 2020) ஆண்டை திருக்குடும்ப சபை நினைவு கூருகின்றது. இன் நிறைவை அர்த்தமுள்ளதும் பயன்மிக்கதுமாக நினைவு கூரும் வகையில் யாழ் திருக்குடும்ப கன்னியர்கள் இது வரையில் தமது பிரசன்னம் கிடைக்கப் பெறாத இடம் ஒன்றை 2017ல் தெரிவு செய்து அங்குள்ள மக்களுக்கு மத வேறுபாடின்றி சிறப்பான பணியாற்ற, முக்கியமாக போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்குத் தமது பணி சென்றடைய மல்லாவியில் அனிஞ்சியன்குளம், தேறாங்கண்டல், பூநகரி பகுதியிலும் மற்றும் ஜெயபுரம் ஆகிய கிராமங்களிலும் "மாற்றத்திற்கான இளைஞருக்கான செயல்திட்டம்." என்ற தொனிப் பொருளில் ஒரு செயல்திட்டத்தை ஆரம்பித்தனர். (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## குருத்துவத்தில் வெள்ளிவிழாக்காணும் எம் குருக்கள்



**அருட்பணி . ம.வி.இ. இரவிச்சந்திரன்**

யாழ். மறைமாவட்டத்தின்
சூரியசந்திரன்
இரவிச்சந்திரன் அடிகளார்!
அன்பிய - இளையோர்
பொதுநிலை ஆணைக்குழு
செயற்திற இயக்குநர்
இறையியல் கல்லூரி
முத்தான முதல்வர்
யாழ்ப்பாண பல்கலைக்கழக
சிரேஷ்ட விரிவுரையாளர்
பங்குத்தந்தை இவ்வாறு
பற்பல பரிமாணங்கள்
பாங்குறவே எடுத்த
பணியின் நாயகன்
வெள்ளியில் வைத்த
காலடித்தடங்கள்
கரையற்றுக் கடந்திட
இறையாசி வேண்டி
வாழ்த்துகின்றோம்



**அருட்பணி . லோ. றெனாட் றெமிந்திரன் அ.ம.தி**

அமலமரித்தியாகிகள் சபை
அருட்பெரும் குருவானீர்!
பணி வாழ்வின் முடிதொட்டீர்
பாகிஸ்தான் மண்ணில்
மறைபணியாற்றி
மாங்காப்புகழ் பெற்று
கோதுமை மணியெனப்
பணிக்கே விதையானீர்!
உம் விருட்ச நிழலில்
மனிதம் மாண்பு பெற
இமைப்பொழுதும் சோராமல்
இறைபணி புரிந்து நிற்கும்
உந்தனது தடமதில்
வெள்ளி இன்று பூத்ததுவே
அள்ளி வரும் இறையருளில்
துள்ளி வரும் இளமையுடன்
பணித்தடங்கள் தொடர்ந்திட
வாழ்த்துகின்றோம்
வாழியவே !



**அருட்பணி . சு. ஸ்ரனிஸ்லஸ் அ.ம.தி**

*ஏழைகளுக்கு நற்செய்தி*
*அறிவிக்க* விருதுவாக்கை
சிந்தையில் ஏந்தி
அமலமரித்தியாகிகள் சபை
ஏகி நின்ற அருட்குரு
அன்பகத்தின் இயக்குநராய்
நோயாளிகள் தம்
துயர் துடைக்கும்
ஆன்மீகக் குருவாய்
சமாதானம் நீதி மலர
ஒலித்திடும் குரலாக
வலம் வரும் அடிகளாரின்
அடியின் கீழ் வெள்ளியும்
பணிந்தது காண்!
இறைவன் சித்தத்தில்
மக்கள் மனம் மலர
மாநிலம் மகிழ்ந்திட
தொட்ட பணி தொடர்ந்திட
வாழ்த்துகின்றோம்

**பாதுகாவலன் வாசகர்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்**

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில்...

உலகம் இன்று கொந்தளித்த வண்ணம் உள்ளது. 'கொரோனா' வைரஸின் தாக்கம் புதிய புதிய பரிமாணங்களை எடுத்து நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. சமூகவலைத்தளங்கள் வெளியிடும் உண்மையான மற்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளால் உலகப் போருக்கு முகம் கொடுக்கும் மனோபாவத்தில் பூமிப்பந்து சுற்றி வருகிறது. கொந்தளிப்பை யார் தான் அடக்கமுடியும் ?

சுனாமியாகக் கடல் கொந்தளித்தது. யார் அதனை அடக்கினார்கள்? அள்ளித்தந்த கடல் அள்ளிக் கொண்டுபோன போது எம்மால் பார்க்கத்தான் முடிந்தது. கொந்தளிப்பை அடக்க முடியவில்லை. ஆனால் கிறிஸ்து இயேசு "கடலே இரையாதே" எனக் கூறி கொந்தளிப்பை அடக்கி கடலின்மேல் நடந்து போனார். இது இயற்கையின் மீது கடவுளுக்கு இருக்கும் ஆளுகையை எடுத்துக் காட்டினாலும் எல்லாவற்றுக்கும் மேலாக அழிவுகளையும், கொந்தளிப்புகளையும் அடக்குகின்ற சக்தி கடவுளுக்குத் தான் உண்டு என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இன்றைய உலகம் பல்வேறு வகையான கொந்தளிப்புகளோடுதான் வலம் வருகின்றது. இனங்களுக்கிடையிலான கொந்தளிப்புகள், மதங்களுக்கிடையிலான கொந்தளிப்புகள், எல்லைகளுக்கிடையிலான கொந்தளிப்புகள், கலாசாரக் கொந்தளிப்புகள், சமூகச்சீரழிவுக் கொந்தளிப்புகள் என பல்வேறு கொந்தளிப்புகளுக்குள் நாம் சிக்கியிருக்கின்றோம். இவற்றின் மத்தியில் புதிதாக நுழைந்து கொண்டது தான் 'கொரோனா' வைரஸ் கொந்தளிப்பு.

இவற்றிலிருந்து மீள அன்று கொந்தளிப்புகளை அடக்கி அமைதியை உண்டு பண்ணிய கிறிஸ்து இயேசுவை நாம் முழு மனதுடன் பற்றிக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். கடவுள் மீதான நம்பிக்கை பக்தி நம்மைவிட்டு மெல்லமெல்ல விலகிச் செல்வதே இத்தகைய அபத்தமான விளைவுகளுக்கெல்லாம் காரணமாக அமைகின்றது. வாழ்வாக்கப்படாத வழிபாடுகளையும், தெருவிழாக்களான திருவிழாக்களையும், நன்றியில்லாத நன்றித் திருப்பலிகளையும், தவத்தை மறுதலித்த தவக்காலத்தையும் நாம் நிகழ்த்தி வருகின்றோம். சுருக்கமாகக் கூறப்போனால் வெளிப்புறத்தை அழகாக்கிக் கொண்டு உட்புறத்தை அழுக்குகளால் நிறைத்துக் கொண்டிருக்கின்றோம். இதைத்தான் ஒரு கவிஞனும் சொன்னான் **"ஆலயத்துக்கு வெளியே செருப்பு கழற்றப்பட்டிருக்கிறது ஆனால் அழுக்கு உள்ளே போகிறது."** வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகளென கிறிஸ்து அங்கலாய்த்ததும் இதைத் தான். உலகத்தில் பாவம் பெருகினால் கடவுளின் சினம் எவ்வாறு இறங்கும் என்பதற்கு நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கும், சோதோம் கொமரா நகரங்கள் தீயிற்கு இரையானதும் தக்க சான்றுகளாகும். லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்களென திருவிவிலியம் நம்மை எச்சரிக்கின்றது.

எருசலேம் நகரத்தைப் பார்த்து அன்று கண்ணீர் சிந்திய இயேசு சிலுவைப்பயணத்தில் தன்னைப் பின்தொடர்ந்த எருசலேம் நகரப் பெண்களைப் பார்த்து நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் எனக் கூறினார்.

தவக்காலம் நமக்குத் தரப்பட்டிருக்கிறது நமது தவங்கள் செபங்கள் துயருறுவோரை வாழ்விப்பனவாக அமைய வேண்டும். **கல்வாரித் தலங்களுக்கு சுற்றுலா செல்வதை விடுத்து வாழ்க்கையில் கல்வாரி கண்ட எம் சகோதரர்களின் துயர் துடைக்க கொல்கொதாக்கள் நோக்கிப் பயணிப்போம்.** யூதாசைப் போல் பிறருக்குக் குழிபறிக்காமல் சிலுவை சுமந்து சோர்ந்திருக்கும் நம் சகோதரர்களுக்கு சீமோன்களாக, வெரோனிக்கம்மாள்களாக சுமை தாங்கிகளென மாறி நிற்போம். இல்லையெனில் இஸ்ராயேலர் அன்று **சீயோனை நினைத்துப் பாபிலோன் ஆறுகள் அருகே அமர்ந்து கண்ணீர் சிந்தியதைப் போல நாமும் 'கொரோனா' வைரஸை நினைத்து யாழ்ப்பாணக் குடாநாட்டு நீர்க்கரையோரங்களில் இருந்து கண்ணீர் சிந்துவதைவிட வேறு வழியிருக்காது.** ஏனென்றால் கடவுள் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## "இயற்கை இனிமேலும் எம்மை மன்னிக்காது"

**மே மாதம் 16-24 சுற்றுச்சூழல் வாரம் திருத்தந்தை பிரகடனம்**

சுற்றுச்சூழல் பராமரிப்புப் பற்றி எமது திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்ட 'Laudato Si' என்ற சுற்றுமடலின் ஐந்தாவது ஆண்டு நிறைவில் நாம் வாழும் பூமியைப் பாதுகாப்பதும் எமது தலையாய கடமை என்பதை திருத்தந்தை ஞாபகப்படுத்தி வருகிற மே மாதம் 16ம் திகதி முதல் 24ம் திகதி வரையிலான காலத்தை சுற்றுச் சூழல் பராமரிப்பு வாரமாக அனுசரிக்குமாறு கேட்டுள்ளார்.

இயற்கை இனிமேலும் எம்மை மன்னிக்காது என்று கூறிய திருத்தந்தை இறைவனின் அழகிய படைப்புக்கள் மட்டிலான எமது கடமையை மீண்டும் நாம் உள்வாங்கி செயற்படுத்தும் விதமாக இவ் வாரத்தை அனுசரிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார். எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் எப்படியான ஒரு பூமியை விட்டுச் செல்லப்போகிறோம் என்ற கேள்வியை நாம் எல்லாரும் கேட்க வேண்டும் என்றும் திருத்தந்தை நினைவுபடுத்தினார்.

## புனித லூர்த்து அன்னை திருத்தலத்தில் புனித நீரில் குளிக்கத் தடை

உலகில் பரவிவரும் கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் நோய் காரணமாக பிரான்ஸ் நாட்டிலுள்ள புனித லூர்த்து அன்னை திருத்தலத்தில் புனித நீரில் குளிப்பதற்கு ப் பாதுகாப்புக்கருதிதற்காலிகமாகதடைவிதிக்கப்பட்டுள்ளது.

புனித பேர்னதெத் அம்மாளுக்கு மரியன்னை காட்சி காண்பித்த இப்புனித நீருற்றிலிருந்து வரும் நீரில் தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் நீராடி குணம் பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கத்தோலிக்க கலைஞர் விபரம் சேகரிப்பு

யாழ் மறைமாவட்ட கலைபண்பாட்டுக்குழு கத்தோலிக்க கலைஞர்களின் விபரங்களை ஆவணப்படுத்தவுள்ளது. எனவே கத்தோலிக்க கலைஞர்கள் உங்கள் பங்குத்தந்தையர் மூலமாக உங்கள் விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டு குழுவின் தலைவர் அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் வேண்டி நிற்கின்றார்.



01.03. 2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மல்வம் பங்கு இளையோருக்கும் புனித சவேரியார் குருமட நான்காம் வருட இறையியல் மாணவர்களுக்குமான ஒன்றுகூடல் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரிபன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வினை மல்வம் பங்குத்தந்தை அருட்பணி லீயோ ஆம்ஸ்ரோங் அடிகளார் ஒழுங்குபடுத்தியிருந்தார். இந்நிகழ்வில் 15 அருட் சகோதரர்களும் 60 ற்கும் அதிகமான இளையோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தலைமைத்துவப் பயிற்சி, விளையாட்டு, கருத்துரை என்பன நடைபெற்றன. வளவாளர்களாக திருமறைக்கலாமன்றத்தை சேர்ந்த திரு. கரன்சன் ஜெகன் கலந்து இளையோரை வழிப்படுத்தி இந்நிகழ்வினை சிறப்பித்தார்.

# யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் அரச பணியாளர் சங்கம் ஆரம்பம்

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க அரச பணியாளர் (புதவிநிலை) சங்கம் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் யாழ் மறைமாவட்டப் பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்பணி யே.யே. மவுலிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற அரச பணியாளர்களுக்கான ஒன்றுகூடலில் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் உலகத் தமிழர் பேரவைத் தலைவரும் மூத்த குருவுமான அருட்பணி எஸ்.ஜே.இம்மனுவல் அடிகளார் சிறப்புரையாற்றினார். இந்த அமைப்பு உருவாகவேண்டியதன் அவசியம், கடமைகள், பணிகள் பற்றி எடுத்துரைத்தார். நாம் தமிழர்கள். கிறிஸ்தவர்கள் என்பதை சான்றுபகரும் விதத்தில் கிறிஸ்தவ விழுமியங்களைப் பணியிடங்களில் கடைப்பிடிக்க வேண்டும். உப்பாக, ஒளியாக வெவ்வேறு மதத்தவர்களிடையே உண்மை, நீதி, நேர்மை, அன்பு, பகிர்தல், உறவு, புரிந்துணர்வை வெளிப்படுத்திப் பணியாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற நிர்வாகத் தெரிவில் தலைவராக ஜே.கில்பேட்குணமும், உபதலைவராக எஸ்.சாந்தசீலனும், செயலாளராக இ.யோண்சனும், உபசெயலாளராக யே.கொன்கிளேடியசும், ஒருங்கிணைப்பாளராக பி.ஈ.ஜி.சுரேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தேசிய கத்தோலிக்க சமூகத்தொடர்பு ஆணைக்குழுக் கூட்டம்

தேசிய கத்தோலிக்க சமூகத்தொடர்பு ஆணைக் குழுவின் கூட்டம் 29.02.2020 அன்று கொழும்பு பல்கம் பிளேஸில் இடம்பெற்றது. இதில் ஆணைக்குழுவின் தலைவர் மேதகு மக்ஸ்வெல் சில்வா ஆண்டகையும், ஆணைக்குழுவின் செயலர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்விற்கு யாழ் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி அன்ரனி ஸ்ரீபன் அடிகளாரும் திரு.ம.பிரான்சிஸ்க் மற்றும் திரு.இ.அ.அமலரட்ணம் ஆகியோரும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

## நாடக எழுத்துருவாக்கப் போட்டி

2020 ஆம் ஆண்டில் யாழ் மறைமாவட்ட கலை பண்பாட்டுக்குழு துயருறுவோர் வாழ்வில் ஒளியேற்ற நாடக எழுத்துருவாக்கப் போட்டியை நடாத்த எண்ணியுள்ளது.

நாடகத்தில் ஆர்வமுள்ள கலைஞர்களை நாடக எழுத்துருவாக்கத்தில் ஈடுபட ஊக்குவிக்கும்படி மறைமாவட்ட கலை பண்பாட்டுக் குழு பங்குத்தந்தையர்களை வேண்டியுள்ளது. ஆர்வமுள்ள கலைஞர்கள் மார்ச் 31ம் திகதிக்கு முன் பங்குத்தந்தையர்கள் மூலமாக விண்ணப்பிக்கவும்.

## திருக்குடும்ப சபையின் 200வது....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் மேற் கூறப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 18 - 30 வயதிற்குட்பட்ட இருபாலாரையும் ஒன்று சேர்த்து அவர்களது உள ஆற்றுப்படுத்தல், சுய தொழில், பயிற்சி, ஆன்மீகப் பயிற்சி, வாழ்வாதார உதவி, உறவு பாலம் எனும் தென் மாகாணத்திற்கான சுற்றுலா போன்றவற்றில் ஈடுபடுத்தி குறிப்பிடத் தக்களவு மாற்றத்தைக் கொண்டு வர உதவிகள் வழங்கப்பட்டன. இதன் சிறப்பு அம்சம் யாதெனில் யாழ் மாகாண சகோதரிகளுடன் கொழும்பு மாகாண சகோதரிகளும் சில நிகழ்வுகளில் 2017 - 2020 வரை பங்காளிகளாக உடன் நடந்தனர். இதன் நிறைவாக 2019 இன் இறுதிப்பகுதியில் இவர்களுக்கான ஒன்றுகூடல் மற்றும் தியானத்திற்குமான ஒரு மண்டபம் அமைப்பதற்கு அனிஞ்சியன்குளம் என்ற இடத்தில் நிலம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு , நிர்மாணிக்கப்பட்டு அத்துடன் சிறுவர் விளையாட்டு முற்றம் ஒன்றும் அமைக்கப்பட்டு இவ்வாண்டில் பங்குனி 1ம் திகதி திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இம் மண்டபத்தை யாழ் குரு முதல்வர் ஆசீர்வதிக்க, யாழ் கொழும்பு திருக்குடும்ப மாகாண தலைவியர்கள் திறந்து வைத்தனர் இந் நிகழ்வை சிறப்பிக்க யாழ்ப்பாணம் , கொழும்பு , வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள அருட்சகோதரிகள் துணை குருக்கள் தியானயோக சகோதரிகள் திருமட சார்பற்ற சகோதரிகள் திருக்குடும்ப பொதுநிலை அங்கத்தவர்கள் ஆகிய சபையின் ஐந்து கிளையினரும் ஒருங்கிணைந்து அக்கிராம மக்களுடன் ஒன்றிணைந்து இந் நிகழ்வை முழுமை பெறச் செய்தது மிகவும் சிறப்பான அம்சமாகும். மேலும் மல்லாவி பங்கு தந்தை, பாடசாலை அதிபர், மாணவர்கள், பிரதேச செயலக நிர்வாக அலுவலர், சமுர்த்தி அலுவலர் போன்ற பலர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எழுவைதீவுக்கு அபகீர்த்தி ஆளுநருக்கு மக்கள் மனு!

**‘உண்மைக்குப் புறம்பான தகவலை வெளியிட்டு தமது பிரதேசத்துக்கும், மக் களுக்கும் அபகிர்த்தியை உண்டுபண்ணிய உள்ளூர்ப் பத்திரிகை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, எழுவைதீவு மக்களால் வடக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்று நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.**

எழுவைதீவு மணிவாசகர் சனசமூக நிலையம் எழுவைதீவு சைவ பரிபாலனசபை எழுவைதீவு கிராமஅபிவிருத்திச்சங்கம், எழுவைதீவு புனித தோமையார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், எழுவைதீவு மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம், எழுவைதீவு கிராம சக்தி மக்கள் சங்கம் ஆகிய அமைப்புகளே கூட்டாக மேற்படி மனுவைக் கையளித்துள்ளன. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: யாழ்ப்பாணத்திலிருந்து வெளியா கும் குறித்த உள்ளூர்ப்பத்திரிகையில்,உண்மைக்கு மாறான செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதனை அறிந்த எழுவைதீவைச் சேர்ந்த இரு மதம் சார்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் குறித்த ஊடக நிறுவனத்துக்குச் சென்று இந்தச் செய்தி குறித்துவினவிய போது இரு ஊடகவியலாளர் எம்முடன் உரையாடிக் கொண்டிருந்தனர். அவ்வேளை திடீரென அங்கு வந்த குறித்த உள்ளூர் ஊடகத்தின் ஆசிரிய பீடத்தைச்சேர்ந்தவர் எனக் கூறப்படும் ஒருவர் எம்மைத்தகாத வார்த்தைகளால் பேசி அச்சுறுத்தியதுடன் எம்மைத் தாக்க முற்பட்டார். அதனைத் தொடர்ந்து எமது மக்களுக்கும் அவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளும் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகச் செயலரும் அந்த இடத்துக்கு வந்து எமது மக்களையும் குறித்த ஊடகத்தினரையும் அழைத்து கலந்துரையாடினர். குறித்த செய்தியை மறுப்புச் செய்தியாக வெளியிடுமாறு குறித்த ஊடகத்திடம் கூறிய போதும் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து தம்மைத்தாக்க வந்ததாக குறித்த ஊடகத்தினர் கூறிய போது நாம் சி.சி.ரி காணொளியை பார்வையிடுமாறு வலியுறுத்தினோம்.

அதனைத் தொடர்ந்து இரு தரப்பினரையும் தத்தமது பொலிஸ் பிரிவுக்குட்பட்டபொலிஸ் நிலையங்களில்முறைப்பாட்டைப் பதிவு செய்யுமாறு பொலிஸார் கூறினர். ஆனால் குறித்த ஊடகத்தில் கடந்த 21.02.2020 இல் வெளியான செய்தியில், நடந்தசம்பவத்தை மூடி மறைத்து உண்மைக்குப்புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளனர்.

தொடர்ந்து 22.02.2020 இல் குறித்த ஊடகத்தில் வெளியான கண்டன அறிக்கைகள் எழுவைதீவு மக்களாகிய எம்மை மனவேதனைக்கு உட்படுத்தியுள்ளது - ஆகவே அன்பார்ந்த உலக வாழ் தமிழ் மக்களே எழுவைதீவு எனும் சிறிய கிரா மத்தில் மதவேற்றுமை உள்ளதா என்ப தனை அறிந்து கொள்வதற்கு இலங்கையில் உள்ள அனைத்து ஊடகங்களும் அரசியல்வாதிகளும் அனைத்து மதத் தலைவர்களும் அரச அதிகாரிகளும் எமது கிராமத்துக்கு வருகை தந்து இரு மதம் சார்ந்த மக்களையும் நேரில் வந்து கலந்துரையாடினால் உண்மைத்தன்மை தெரியவரும். எமது நாட்டு தமிழ் மக்களின் ஒற்று மையை மத ரீதியாக பிளவுபடுத்த முயலும் சக்திகளுக்கு இடமளித்து பிரிவினையைத் தூண்ட வேண்டாமென மிகவும் வினயமாக வேண்டி நிற்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவில் எழுவைதீவில் வசிக்கும் 282 பேர் கையொப்பமிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகின்றோம். (2 கொரி 5:20)

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

எம்முடைய தனிப்பட்ட மற்றும் குழும வாழ்வின் மூலைக் கல்லான இயேசு ஆண்டவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் எனும் பெரும் மறைபொருளைபுதுப்பிக்கப்பட்டஇதயங்களுடன் கொண்டாடுவதற்கு இவ்வாண்டு மீண்டும் ஒரு அற்புதமான காலத்தை இறைவன் எமக்களித்திருக்கிறார்.

எவ்வளவுக்கெவ்வளவு நலம் இந்த மறைபொருளின் ஆன்மீக பலத்திற்காக தாராள மற்றும் சுதந்திரமான உள்ளங்களுடன் பதிலளிக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அது எங்களுள் வளர்ச்சி காணும். ஆதற்காக நாம் எம் இதயத்திலும் மனத்திலும் அந்த மறைபொருளை நோக்கித் தொடர்ச்சியாகத் திரும்புதல் அவசியமாகும்.

**1. மனமாற்றத்தின் அடிப்படையான பாஸ்கா மறை பொருள்**

கிறிஸ்தவ மகிழ்ச்சியானது இயேசு ஆண்டவருடைய இறப்பு மற்றும் உயிர்ப்பின் நற்செய்தியைக் கேட்டு ஏற்றுக் கொள்வதிலிருந்து ஊற்றெடுக்கிறது. இந்த அப்போஸ்துவப் போதனையானது அன்பின் மறைபொருளை நிறைவுபட பேசுகிறது. “இது மிகவும் உண்மையானது” மிகவும் உறுதியானது. இது வெளிப்படையான மற்றும் பயனளிக்கும் உரையாடலின் உறவுக்கு நம்மை அழைத்து நிற்கின்றது. (Christos Visit, 117) யாரெல்லாம் இச்செய்தியை நம்புகிறார்களோ அவர்கள் வாழ்க்கை நம்முடையது என்கிற பொய்யை நிராகரிக்கிறார்கள்.

அதனால் உண்மை எதுவெனில், எமக்கு நிறைவான வாழ்வைத் தர விரும்புற இறை தந்தையின் அன்பிலிருந்தே எமது வாழ்வு பிறக்கிறது. (யோவான் 10:10) மாறாக “பொய்களின் தந்தையின்” (யோவான் 8:44) சோதிக்கும் குரலுக்கும் செவிகொடுத்தால் அபித்தத்தின் படுகுழியில் மூழ்கி, பூமியிலே நரகத்தை அனுபவிப்போம், தனிப்பட்ட மற்றும் குழும வாழ்வினது பாவங்களில் சோகமான வாழ்வின் சாட்சியங்களாக நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

கிறிஸ்ருஸ் லிவிட் என்ற அப்போஸ்தலிக்கச் சுற்றுவட்டங்களில் இணைவோருக்கு எழுதிய பகுதியை 2020 ஆண்டு தவக்காலத்தில் உங்களோடு பகிர்ந்துகொள்ள விளைகிறேன்: “சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் நீட்டிய கரங்களில் உங்கள் கண்களை நிலை நிறுத்துங்கள். நீங்கள் மீண்டும் மீண்டும் மீட்கப்படுவதற்கு உங்களை அனுமதியுங்கள். நீங்கள் பாவ அறிக்கை செய்யும் போது உங்கள் குற்றங்களிலிருந்து விடுவிக்கும் அவரது கருணையை உறுதியாக நம்புங்கள். பேரன்போடு உங்கள் மீது ஊற்றப்பட்ட அவரது இரத்தத்தை குறித்து தியானித்து அது உங்களைத் தூய்மையாக்கஅனுமதியுங்கள். இவ்வாறு நீங்கள் எப்போதும் புதிதாகப் பிறக்க முடியும்”. (எண் 123)

**2. மனமாற்றத்திற்கான அவசரத் தேவை**

உண்மையில் இறை இரக்கத்தின் அனுபவமானது சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுவுடனான “முகமுகமான” தரிசிப்பில் மட்டுமே சாத்தியமாகும். இந்த அருளின் காலத்திலே இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் பயணித்தது போல எம்மையும் ஒரு பாலைவன அனுபவத்தினூடாக பயணிக்க அனுமதிக்கிறபோது நாம் இன்னும் ஆழமாக மணமகனாம் இறைவனது குரலைக் கேட்க முடியும்.

**3. தன் குழந்தைகளுடன் உரையாடுவதற்காக கடவுளது விருப்பம்**

எமது வாழ்விலும், உலகிலும் திருச்சபையிலும் தீமையின் ஆதிக்கம் இருந்துகொண்டே இருந்தாலும் எம் வாழ்வின் போக்குகளை மாற்றுவதற்கான கடவுளின் விருப்பானது அத்தனையையும் தாண்டி மீட்பின் உரையாடலுக்கு எந்த வகையிலும் இடையூறு விளையா வண்ணம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. நம்முடைய மனமாற்றத்திற்கான சாதகமான காலத்தை... (தொடர்ச்சி 11ம் பக்.)

# அருட்பணியாளர்களுக்கு திருத்தந்தையின் தவக்கால உரை

அருட்பணியாளர்களின் உள்ளங்களில் ஓர் ஒட்டுண்ணியாகவோ, புல்லுருவியாகவோ இருந்து, அவர்கள் அழைத்தலில் இருக்கவேண்டிய மகிழ்வை உறிஞ்சிவிடும் கசப்புணர்வைக் குறித்து தான் பேச விழைவதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உரோம் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்களுக்காக தயார் செய்திருந்த ஓர் உரையில் கூறியுள்ளார்.

உரோம் நகரில் பணியாற்றும் அருட்பணியாளர்களை, பெப்ரவரி 27, இலாத்தரன் புனித யோவான் பெருங்கோவிலில் சந்திக்கும் நிகழ்வு திருத்தந்தையின் காலை நிகழ்ச் சிகளில் ஒன்றாக இருந்தது.

**அருட்பணியாளர்களுக்கு தவக்கால உரை**

ஆனால், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உடல் நிலையில் சிறிது தளர்ந்திருந்ததால், அவருக்குப் பதிலாக, திருத்தந்தையின் சார்பில் உரோம் நகரின் ஆயராகப் பணியாற்றும் கர்தினால் Angelo De Donatis அவர்கள், திருத்தந்தையின் உரையை அருட்பணியாளர்களுக்கு வாசித்தளித்தார்.

**கசப்புணர்வுக்கு மூன்று காரணங்கள்**

ஒவ்வோர் அருட்பணியாளரின் உள்ளத்திலும் எழும் கசப்புணர்வைக் குறித்து தான் பேச விழைவதாகக் தன் தவக்கால உரையை ஆரம்பித்துள்ள திருத்தந்தை, ஒவ்வொருவர் உள்ளத்திலும் உருவாகும் கசப்பிற்கு மூன்று காரணங்கள் உண்டு என தன் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அருட்பணியாளர்களின் உள்ளங்களில் எழும் கசப்புணர்வுக்கு, அவர்களது நம்பிக்கை வாழ்வில் எழும் பிரச்சனைகள் முதல் காரணம் என்றும், அதற்கு அடுத்ததாக, ஆயர்களுடன் எழும் பிரச்சனைகளும், ஒருவர், ஒருவருடன் எழும் பிரச்சனைகளும் இரண்டாவது மற்றும் மூன்றாவது காரணங்கள் என்றும் தன் உரையில் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை.

**நம்பிக்கை வாழ்வு பிரச்சனைகளால் எழும் கசப்பு**

எம்மாவுஸ் சென்ற சீடர்கள் (காண்க. லூக். 24:21), இயேசுவைக் குறித்து தாங்கள் கொண்டிருந்த எதிர்பார்ப்பையும், அது நிறைவேறாததால் அடைந்த ஏமாற்றத்தையும் பற்றி பேசியதை ஓர் எடுத்துக்காட்டாகக் காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எதிர்பார்ப்புக்கும், நம்பிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்கிக் கூறி, ஆண்டவர் மீது நம்பிக்கை வளர்வதற்கு, செபம் ஒரு முக்கிய கருவியாக அமைகிறது என்று இவ்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நமக்கு என்ன கிடைக்கும் என்பதே, எதிர்பார்ப்பு என்ற உணர்வுக்கு அடித்தளமாக அமைகிறது என்பதைக் குறிப்பிட்ட திருத்தந்தை, நம்பிக்கை உணர்வோ, நம்மை மையப்படுத்தாமல், நமக்கு என்ன கிடைக்கும் என்பதைப்பற்றி கவலை கொள்ளாமல், இறைவனில் முழு நம்பிக்கை கொள்வதாகும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் உருவாகும் கசப்புணர்வை நமக்கு வழங்கப்பட்டுள்ள ஓர் எச்சரிக்கை மணியாகக் கருதி, இறைவனில் முழு நம்பிக்கையையும், மகிழ்வையும் காண்பதற்கு உதவும் உந்துசக்தியாக அவ்வுணர்வை நாம் பயன்படுத்தமுடியும் என்று உரோம் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கு திருத்தந்தை அழைப்பு விடுத்தார்.

**ஆயர்களுடன் எழும் பிரச்சனைகள்**

அருட்பணியாளர்கள் அடையும் கசப்புணர்வுக்கு இரண்டாவது காரணம், ஆயர்களுடன் எழும் பிரச்சனைகள் என்பதை, தன் உரையில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதிகாரத்திலும், பொறுப்பிலும் இருப்பவர்கள், தவறுகள் செய்யக்கூடியவர்கள் என்பதை நாம் திருஅவையிலும், இவ்வுலகிலும் கண்டுவருகிறோம் என்ற எண்ணத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

கிறிஸ்துவே நமக்கு எல்லாமுமாகிறார் என்பதை முழுமையாக உணர்ந்து ஏற்றுக்கொள்ள இயலாதபோது, நாமே அனைத்தும் என்ற எண்ணத்துடன், நம்மை பிறர் மீது சுமத்தும் சோதனைகள் தோன்றும் என்றும், இதனால், பொறுப்பில் இருப்பவர்களுக்கும், அவர்களுக்குக் கீழ் பணியாற்றுவோருக்கும் இடையே உரசல்கள் எழும் என்றும் திருத்தந்தை தன் உரையில் தெளிவுபடுத்தினார்.

**அருட்பணியாளர்களுக்குள் எழும் பிரச்சனைகள்**

அண்மைய ஆண்டுகளில், பொருளாதார சிக்கல்கள், பாலியல் கொடுமைகள் போன்ற காரணங்களுக்காக அருட்பணியாளர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதை, திருத்தந்தை, இவ்வுரையில் வெளிப்படையாகக் கூறி, இதனால், அருட்பணியாளர்கள், ஒருவர் மற்றவர் மீது கொள்ளும் சந்தேகங்கள், அவர்கள் நடுவே கசப்புணர்வை வளர்த்துள்ளன என்பதை வலியுறுத்தியுள்ளார்.

கசப்புணர்வின் இந்த மூன்றாவது காரணத்தைக் குறித்து அதிக எண்ணங்களைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அருட்பணியாளர்களைக் குறித்து எழும் குற்றச்சாட்டுகளால், ஒருவர் தன்னையே சமுதாயத்திலிருந்து பிரித்து தனிமைப்படுத்திக் கொள்வது, ஒருபோதும் தீர்வாகாது என்பதையும் கூறியுள்ளார்.

**அருட்பணியாளர்களுக்கு திருத்தந்தையின் எச்சரிக்கை**

தன்னையேதனிமைப்படுத்திக்கொள்ளும் அருட்பணியாளர்கள், விரைவில், தங்கள் தனிமையைப் போக்க, இவ்வுலகம் சொல்லித்தரும் வழிகளில் செல்ல முயல்கின்றனர் என்பதையும், திருத்தந்தை ஓர் எச்சரிக்கையாக விடுத்துள்ளார்.

மற்றவர்களோடு நம் நேரத்தையும், எண்ணங்களையும் பகிர்ந்துகொள்ள விழையாமல் வாழ்வது, சாத்தானுக்கு மிகவும் பிடித்த ஒரு நிலை என்பதை, தன் உரையில் சுட்டிக்காட்டியுள்ளத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறைவன் மீதும், இறை மக்கள் மீதும் முழு நம்பிக்கை கொண்டு உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவதே நம் கசப்புணர்வை வெல்லும் சிறந்த வழி என்பதை உரோம் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கு உணர்த்தியுள்ளார்

## காவலன் கலசம்



# இறைவனை நம் இதய ஆழத்தின் தேடலாக அமைய அழைக்கும் தவக்காலம்!

**த**வக்காலம் அருளின் காலம், மனமாற்றத்தின் காலம். பருவங்கள் நான்காக - வசந்தகாலம், குளிர்காலம், கோடைகாலம், இலையுதிர்காலம் என்று உள்ளது போன்று, கத்தோலிக்க திருச்சபை இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வை மையமாக்கி , வழிபாட்டு ஆண்டை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கின்றது. அவை திருவருகைக் காலம், கிறிஸ்து பிறப்புக் காலம், தவக்காலம், பாஸ்கா காலம், பொதுக்காலம்.

தவக்காலம் நாற்பது நாட்களைக் கொண்டது. ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணத்தைத் தியானித்து, சிந்தித்து, தமது உயிரையே தியாகம் செய்யும் அளவுக்கு அன்பு செய்யும் கடவுளோடு நம்மை ஒப்புரவாக்கிக் கொள்வதற்காகத் தயார் செய்யும் காலமாக உள்ளது.

**வரலாற்றுப் பின்னணி :**

மனமாற்றம், ஒப்புர வுக்கு தொடக்கத்தில் 40 மணி நேரம் கொடுக்கப் பட்டது. பின்பு இரண்டு நாட்கள், ஒரு வாரம், மூன்று வாரம் என்று விரிந்து, 325 ஆம் ஆண்டு நிசேயா திருச்சங்கம் தவக்காலத்தை 40 நாட்கள் கொண்ட தாக இறுதி செய்தது.

**ஏன் இந்த நாற்பது நாட்கள் ?**

நாற்பது நாட் களின் சிறப்பு என்ன? விவிலியத்தின் பின்னணியைக் கொண்டே திருச்சபை இக்காலத்தை நாற்பது நாட்களாக இறுதி செய்தது. யாவே இறைவன் இஸ்ரயேல் மக்களைப் பாலை வனத்தில் மோசே தலைமையில் 40 ஆண்டுகள் வழிநடத்தி எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டது. நோவா காலத்தில் 40 நாட்கள் இரவும் பகலும் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கடவுள் பூமியைச் சுத்தம் செய்தார். இறைவாக்கினர் யோனா நினிவே மக்கள் தங்கள் பாவங்களை நினைத்து வருந்தி மனம் மாற 40 நாட்களை வழங்கினார். இதுபோன்றே இயேசு ஆண்டவர் தமது இறையாட்சிப் பணியை, இறையரசை நிறுவும் பணியை, சாத்தானை வென்று மக்களைத் தந்தை கடவுளுடன் ஒப்புரவாக்கும் பணியைத் தொடங்குமுன் 40 நாட்கள் பாலைவனத் தில் உண்ணா நோன்பிருந்தார். இந்த நமது ஆண்டவர் இயேசுவின் 40 நாள் பாலை வன அனுபவத்தை மையமாக வைத்தே திருச்சபை நம்மை இந்தத் தவக்கால 40 நாட்களை அனுசரிக்க அழைக்கிறது. இந்தத் தவக்காலத்தில் இயேசு பாலைவனத்தில் செபம், தவத்தில் ஈடுபட்டிருந்தது போல, கிறிஸ்தவர்களாகிய நாம் செபம், தவம், தானதர்மங்களில் ஈடுபட வேண்டும் என்கிறது திருச்சபை. இம்மூன்றும் மனிதர்கள் நாம் நமது கடவுளுடனான உறவைச் சீர்செய்ய, அதன் மூலம் கடவுளுடன் ஒப்புரவாக பெரிதும் உதவுகின்றன. இறைவனுடனான நமது ஒப்புரவு சக மனிதர்கள், இயற்கையுடனான ஒப்புரவின் அடிப்படையிலேயே நிறைவேறக்கூடியதாகும். இயேசு மாற்கு நற்செய்தி 9:29 இல் இவ்வகை பேய் இறை வேண்டலினாலும், நோன்பினாலும் அன்றி வேறு எதனாலும் வெளி யேறாது என்கிறார். சாத்தானுடைய தூண்டுதலினால் எவ்வகைத் தீய பழக்கவழக்கங்களுக்கு நாம் ஆளாகி இருந்தாலும், அந்தத் தீய பழக்கவழக்கத்திலிருந்து விடுதலையடைய செபமும், நோன்பும் அவசியம் என்பதை உணர்த்துகிறார் இயேசு.

மேலும் இயேசு தானம், பகிர்ந்தளிப்பதுதான் தன்னை ஒருவர் பின்பற்றுவதற்கு மிக அடிப்படையான தேவை என்கிறார்: "உமக்கு இன்னும் ஒன்று குறைவுபடுகிறது. நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும்... பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" (மாற் 10) என்று தம்மைப் பின்பற்ற விரும்பிய செல்வரிடம் கூறினார்.

தவக்காலத்தில் ஆண்டவர் இயேசுவின் பாடுகளைக் குறிக்கும் விதமாக ஆலயத்தின் பீடம், குருக்களின் திருவுடைகள் ஊதா நிறத்தில் இருக்கும். ஊதா நிறம் இயேசுவின் பாடுகளையும், நமது மனமாற்றத்தையும் குறிக்கும் நிறமாக உள்ளது. தவக்காலத்தில் நமது வழிபாடுகளில் அல்லேலூயா, உன்னதங்களிலே கீதங்கள் இசைக் கப்படுவதில்லை. சுத்தபோசனம், உண்ணாநோன்பு போன்றவைகளைக் கடைப்பிடிக் கத் திருச்சபை பணிக்கிறது. விசுவாசிகள் விருப்பம் போல் தவக்காலத்தின் 40 நாட்களும் அல்லது வெள்ளிக் கிழமைகளிலும் கடைப்பிடித்தாலும், திருச்சபை விபூதிப் புதன், பெரிய வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு நாட்களிலும் கட்டாயம் ஒரு சந்தியும், சுத்தபோசனமும் இருக்கப் பணிக்கிறது. சிலுவைப் பாதை தவக்கால அருளை, கடவுளின் இரக்கத்தை உணர சிறந்த திருவழிபாடாக உள்ளது. 40 நாட்களும் இந்தச் சிலுவைப் பாதை செபத்தைச் செய்தாலும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பங்கு சமூகமாக பெரிய சிலுவைப் பாதையைச் செபிப்பது கட்டாயமாகும்.

தவக்காலங்களில் வரும் ஞாயிறுகள் எப்போதும் இயேசு சோதிக்கப்பட்ட கதை யுடன் தொடங்குகின்றன. இயேசு பாலைவனத்திற்குத் தந்தையோடு உடனிருக்கச் செல்கிறார். சாத்தான் இயேசுவைச் சோதித்தான். சாத்தானின் ஒரே நோக்கம் நம்மைக் கடவுளைச் சென்றடையாமல் செய்ய கடவுளிடம் இட்டுச் செல்லும் பாதையிலிருந்து வில-கிச் செல்ல வைப்பது தான். கடவுளைத் தவிர மற்றனைத்தையும் மனிதர்களை விரும்பச் செய்வதை சாத்தான் தனது பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளான். மனிதனின் முதன்மையான விருப்பம் ஆசை தன்னைப் படைத்த கடவுளைத் தேடி அடைவதே ஆகும். இந்த விருப்ப ஆசையில் மண்ணைப் போடவே சாத்தான் துடியாய்த் துடிக்கிறான். இயேசுவைச் சோதித்த சாத்தான் சாதாரண அடிப்படையான நிலையில் நம்மையும் சோதிக் கிறான். உணர்வுரீதியிலான இன்பத்தை (Sensual pleasure) ஒருவரின் வாழ் வின் பிரதானமான (Centre of Life) மையப்பொருளாக மாற்ற முயல்கிறான் சாத்தான். நமது உடல் ரீதியிலான திருப்தியை (உணவு, பாலுறவு, குடிபோதை) நமது உலக வாழ்வின் மையமானவைகளாக நம்பச் செய்வது. நாம் அனைவரும் உடல் இன்பத்தை (pleasure of the Body) விரும்புபவர்கள். உடல் இன்பங்கள் கடவுளின் கொடையென்றாலும் (God given Gifts), அவை ஒருவரின் வாழ்வின் தலைவனாக (Lord of his / her Life) மாறி மேற்கொண்டிருக்குமேயானால், அம்மனிதரின் ஆழமான ஆசை அல்லது விருப்பமான கடவுளுக்கான விருப்பம் (Deepest desire for God) நிறைவேறாமல் போய்விடும்.

உணர்வு மற்றும் உடல் ரீதியிலான இன்பங்கள் சிறு குழந்தைகளைப் போல எனக்கு வேண்டும், இப்ப வேண்டும் (I want it.... I want it now) என்று ஒருவரை முழுமையாக நெரித்து (So pressing) மேற்கொள்ளக்கூடியது. இவைகள் ஒரு மனிதரின் வாழ்வில் முக்கியத்துவம் பெற்று செயல்படத் தொடங்கும்போது, அம்மனிதரின் வாழ்வு அழியத் தொடங்குகின்றது. இயேசு மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, கடவுளின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான் என்று கூறி உடல் இன்பங்கள், உணர்வெழுச்சிகளுக்கு ஆளாகாமலும் ஒரு மனிதனால் கடவுளைத் தேடி மகிழ்ந்து வாழ முடியும் என்று புரியச் செய்கிறார். ஒரு மனிதன் தன்னை முற்றிலும் புலன்களுக்கும், அவை தரும் சிற்றின்பங்களுக்கும் பலியாக்கிவிட முடியாது.

அடுத்து சாத்தான் இயேசுவை சற்று உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்று சோதிக்கிறான். கோயிலின் உயரமான பகுதியில் இயேசுவை நிறுத்தி "நீர் இறைமகன் என்றால் கீழே குதியும்..." (மத் 4:6). இயேசு காலத்தில் எருசலேம் ஆலயம் யூத சமு தாயத்தின் மையமாக திகழ்ந்தது. ஆலயமே பொருளாதார, அரசியல் மற்றும் சமய மையமாக இருந்தது. ஆலயத்தின் உயரமான பகுதி என்பது சமுதாயத் தின் உயர்ந்த நிலை, எல்லாராலும் பார்க்கப்படக் கூடிய நிலை. அனைவராலும் வியந்து பார்க்கப்படும் நிலை. இதுவே மகிமை, புகழ் குறித்த சோதனை. யாருக்குத்தான் அனைவராலும் பார்க்கப்படுவதும், புகழப்படுவதும், மதிக்கப்படுவதும் பிடிக்காது? அதற்காகத் தானே அனைவரும் ஏங்குகிறோம்? உழைக்கின்றோம்? ஓடிக்கொண்டிருக்கின்றோம்?

சிலருக்கு உணவு, குடி, பாலுணர்வு சார்ந்த தேவைகள் முக்கியமில்லாமல் இருக்கும். அவைகளுக்கு அடிமையாகாமல் இருப்பர். ஆனால், அவர் களுக்கு மதிப்பு, மரியாதை, புகழ் மிகவும் முக்கியமாக இருக்கும். அவர்களின் ஏக்கமாகவும், வாழ்வின் மையமாகவும் இருக்கும். இயேசு இந்தச் சோதனையை எதிர்த்து வெற்றி காண்கிறார். தன்னைவிட தந்தை கடவுளே தனது வாழ்வின் மையம் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

மீண்டும் சாத்தான் இயேசுவை மிக உயர்ந்த மலைக்குக் கொண்டு சென்று உலக அரசுகள், அவற்றின் மேன்மையைக் காட்டி தன்னை வணங்கும்படி கூறிச் சோதிக்கிறான். இது அதிகாரத்துக்கான (power) சோதனை. மற்றவர்களை ஆட்டிப் படைக்க, சொத்துச் சேர்க்க, ஆட்சி அதிகாரங்களை அடைந்து அனுபவிக்க யார் காலி லும் விழும் நிலை. நமது அரசியல்வாதிகள் அதிகாரத்திற்கு வரவும், அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ளவும் தயாராக இருப்பது போன்ற சோதனை இது.

அதிகாரத்தைப் பெற இவர்கள் சாத்தானையும் ஆராதிக்க தயங்கமாட்டார்கள். அதிகாரத்தை இழப்பது இவர்களுக்கு அனைத்தையும் இழப்ப தாகும். இவர்களுக்கு உடல் ரீதியிலான அடிப்படைச் சோதனைகள், மக்களின் புகழ்ச்சி போன்றவைகளை விட அதிகாரம் மிகவும் முக்கியம். இயேசு இந்த சோதனையையும் வெற்றி கொண்டார். இன்றைக்கு மனிதன் கடவுளை ஆராதித்து, கடவுளின் கட்டளைகளின்படி வாழ்ந்து, கடவுளின் அன்பு, கருணை, இரக்கம், ஒப்புரவுடன் வாழ்வதை விட, தனது உடல் இச்சைகளுக்கும், உணர்வுகளுக்கும், உலக மகிமை புகழுக்கும், அதிகாரத்திற்கும் அடிமைப்பட்டு சாத்தானை ஆராதிப்பவ னாக வாழ்ந்து வருகிறான்.



அருட்தந்தை டோமி

இயேசு இந்தச் சாத்தானின் மூன்று சோதனைகளையும் வென்று - கடவுளே தமது வாழ்வின் மையம் (God is the cen-tre of my Life) என்று கடவுளை மட்டுமே ஆராதிக்க முற்படும் மெசியாதாம் என் பதை உலகிற்கு உணர்த்த பாலைவனத் துக்குப் பயணமாகிறார். கடவு ளிடமிருந்து நம்மை விலகிச் செல்ல வைத்து, பாவத் திற்கு அடிமையாக்கி அழிக்க நினைக் கும் சாத்தானின் சூழ்ச்சிகளை வெல்ல நாமும் புறப்படுவோம்.

தவக்காலத்தில் இயேசுவைப் போல பாலை வனத்தினுள் நுழைவோம். உடல் மற்றும் உலகக் கவலைகளைக் களைந்து, கடவுளுடன் தனிமையில் தியானித்து திழைப்போம். சாத்தானை எதிர்கொள்ள நமது உணர்வு ரீதியிலான இன்பம், மகிமை, அதிகாரம் போன்ற சோதனைகளில் வெற்றிகொள்ள கடவுளின் அருளைப் பயன்படுத்துவோம்.

இந்தச் சோதனைகளில் நாம் சாத்தானுக்கு அடிமைகளாய் வாழ்ந்தால், கடவுளின் பிரசன்னத்தைத் தாங்கிச் செல்பவர்களாக இருக்க இயலாது. இச்சோதனைகளை வென்று, சாத்தானைப் பின்னுக்குத் தள்ளும்போதே இவ்வுலகில் கடவுளின் பணியை, இறையாட்சிப் பணியைச் செய்யும் தகுதியுடையவர்கள் ஆகிறோம். இயேசுவின் சீடர் களாய் கடவுளை நமது இதய ஆழத்தின் தேடலாக்கி இறைவனுடனும், இயற்கையுடனும் பிறருடனும் ஒப்புரவுடன் மகிழ்ந்து விடுதலை வாழ்வு வாழ இறைவன் விடுக்கும் அழைப்பையும், தரும் அருளையும் வீணாக்காமல் இத்தவக்காலத்தை வழக்கமாக வந்துபோகும் ஒன்றாக்கிவிடாமல், வாழ்வு மாற்றத்தை, மாற்றுருவை ஏற்படுத்தும் ஒன்றாக்க முயல்வோம். பாலைவனத்தில் இயேசுவை வழிநடத்திய கடவுளின் ஆவியா-னவர் நம்மையும் வழி நடத்துவாராக!

**த**வக்காலத்தை ஆரம்பித்து வைக்கும் சாம்பல் புதன் தொடக்கம் உயிர்ப்பு ஞாயிறு வரை மொத்தமாக நாற்பத்து ஆறு நாட்கள் (46) என்றாலும், நாற்பது நாட்களே (40) நாம் நோன்பைக் கடைப்பிடிக்கின்றோம். ஏனென்றால் இந்தக் காலத்தில் வரும் ஆறு ஞாயிறு தினங்கள் நோன்பு கடைப்பிடிக்கும் நாள்களாக கருதப்படுவதில்லை. அதனாலேயே தவக்காலத்தை நாம் நாற்பது நாட்கள் என்கிறோம். இலத்தீன் மொழியில் 'QUADRAGESIMA' எனப்படுகிறது. இதன் பொருள் **நாற்பது.**

# இரக்கத்துடன் காத்திருக்கும் தந்தை உள்ளம்!



அருட்தந்தை நத்தானியேல்

ஒரு நாள் கண்ணீரும் கம்பலையுமாக ஒரு பெண் என்னைத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு, "எனது ஒரே ஏழு வயது மகனை இரண்டு நாட்களாகக் காணவில்லை. அவன் சரியாகப் படிக்க வில்லை என்று அப்பா அடித்துள்ளார். வீட்டைவிட்டு ஓடிவிட்டான். எல்லா இடங்களிலும், அவன் நண்பர்கள் வீடு, பஸ் நிலையம் என்று தேடிய பின், பொலிஸிலும் பதிவு செய்துள்ளோம். என்ன செய்வதென்றே தெரியவில்லை. போட்ட சட்டையு டன் போன பிள்ளை, சாப்பிட்டானா? சாப்பிடவில்லையா? பத்திரமாக இருக்கானா? எங்கே இருக்கான்? என்று எதுவும் தெரியவில்லை" என்று தத்தளிக்கும் மனத்துடன், தழுதழுக்கும் குரலுடன் கூறினார்.

இரண்டு நாட்கள் கழித்து மூன்றாவது நாள் பையன் பசி தாங்காமல் திருச்சியிலுள்ள தனது மாமா வீட்டிற்குச் சென்றடைந்துள்ளான். அங்கிருந்து தங்கள் மகனைக் கண்டுபிடித்து என்னிடம் அழைத்து வந்தனர். அப்பெற்றோரிடம் காணப்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

நாம் அதிகம் அன்பு செய்யும் நம் குழந்தைகள், பெற்றோர், மற்றும் வீட்டு வளர்ப்புப் பிராணிகள், மிகவும் பிடித்த நகை, உடை ஆகியவை காணாமல் போய் அதைத் தேடிக் கண்டுபிடித்த மகிழ்ச்சியின் அனுபவம் ஒவ்வொருவருக்கும் உண்டு. தேடுவதே மகிழ்ச்சி என்கிறவர்களும், எதற்கெடுத்தாலும் 'மகிழ்ச்சி' என்று கூறும் கபாலிகளும் நம் மத்தியில் இருக்கலாம். காணாமல்போன 12 வயது சிறுவன் இயேசுவை மரியாவும், சூசையும் தேடியதைப் பற்றி

விவிலியத்தில், "உன் தந்தையும், நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந் தோம்" (லூக் 2:48) என்று மாதா கூறியபோது அவரின் தத்தளித்த மனமும், மகனைக் கண்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் தெரிகிறது.

**தேடுவதிலும், கண்டுபிடிப்பதிலும் மகிழும் கடவுள் !**

"கடவுளைப் பிரிந்து வெகுதொலைவில் வாழும் ஆன்மா மகிழ்ச்சியாக இருப்பதில்லை. அது போல இறை-வனைக் கண்டடையும் ஆன்மா அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை" என்கிறார் புனிதை அவிலா தெரேசா.

கடவுள் எல்லாரையும் மீட்பதில், தேடிக் கண்டு பிடிப்பதில் ஆர்வமுள்ளவராக, செயலாற்றல் மிக்கவராக, உறுதியுடையவராக, விருப்பமுடையவராக இருக்கிறார். "என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடா மல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும்" (யோவா 6:39) என்பதில் ஒரு பாவிகூட அழிந்துபோவதை தாங்கிக் கொள்ள முடியாத, தத்தளிக் கும் மனதுடையவர் கடவுள் என்பதை உணர முடிகி றது. வழிமாறிப் போன ஓர் ஆட்டுக்காக (The lost sheep), தொலைந்து போன காசுக்காக (The lost coin), காணா மல்போன மகனுக்காக (The lost son) தத்தளிக்கும் உள்ளத்துடன் தேடிக் கொண்டிருக்கும் கடவுள், காணா-மல் போனவர்களைக் கண்டுபிடிக்கையில் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை: "நாம் மகிழ்ந்து கொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில், உன் தம்பி இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர்ப்பெற்றுள்ளான். காணா-மற் போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" (லூக் 15:32) என்கிறார்.

**உடனிருந்து உள்ளத்தில் திரும்பி வர அழைக்கும் கடவுள்!**

கடவுள் நாம் அவரை விட்டு எவ்வளவு தொலை வுக்குச் சென்றாலும், நமது நிழலுக்கும் நமக்குமுள்ள இடைவெளியைவிட இறைவனுக்கும் நமக்குமுள்ள இடை வெளி குறைவே, "நான் வானத்திற்கு ஏறிச்சென்றாலும் நீர் அங்கே இருக்கின்றீர்! பாதாளத்தில் படுக்கையை அமைத்துக் கொண்டா லும் நீர் அங்கேயும் இருக்கின்றீர்!" (திபா 139:8) என்கிறார் திருப்பாடல் ஆசிரியர்.

'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்பதற்கு ஏற்ப, தந்தையுடன் பாதுகாப்பாகவும், மாண்பு டனும், அனைத்துவகை சலுகைகளுடனும் இருக்கும் போது தந்தையின் பெருமை, இனிமை தெரிவதில்லை. தந்தையை விட்டுப் பிரிந்து அனைத்தையும் இழந்து வெகு தொலைவில், அரவணைப்பாரின்றி, பன்றி மேய்க் கும் பணியிலும் பன்றிகளை விட படுமோசமான நிலைக் குத் தள்ளப்படும் போதும், காணாமல்போன மகனின் உள்ளத்தில் உதித்தது தன் அப்பாவின் அன்பும். பேரிரக்க மும், அப்பா வீட்டில் வேலைக்காரர்களுக்குக் கிடைக்கும் வரவேற்பும்! எங்கு போனாலும் பின்தொடரும் தந்தை யின் பேரிரக்கம் காணாமற்போன மகனை எண்ணிப் பார்க்கச் செய்தது, தெளிவு பெற்று, திரும்பிச் செல்ல முடிவெடுக்கச் செய்கிறது.

"ஆண்டவரே, நீர் நல்லவர் கருணை மிக்கவர் உம்மைக் கூவியழைக்கிற யாவருக்கும் மிகுந்த அருளன்பு காட்டுகிறீர்" (85:5) என்கிற திருவிசைப் பாவின் வரிகளைக் காணா மல்போன மகன் உணர்கிறான். அதுபோல, பலவீனத் தால் தவறினாலும், தவறி விழுந்தாலும், திசைமாறிப் போனாலும், தொலைந்து போனாலும் இரக்கத்தின் ஊற்றாகிய இறைவனின் இரக்கம் நம்மை மீட்கும்வரை, கண்டுபிடிக்கும்வரை, தூக்கிவிடும்வரை, திருத்தி திருப் பிக் கொண்டு வரும்வரை ஓயாது, உறங்காது: "இஸ்ரயே லைக் காக்கின்றவர் கண்ணயர்வதுமில்லை. உறங்குவதும் இல்லை " (திபா 121:4).

**காணாமல் போன மகன் உவமை!**

பாவிகளுக்குத் தங்களது வாழ்வில் இடமில்லை என்று கருதிய பரிசேயர்களுக்கு மூன்று உவமைகள் வழியாகக் கடவுளின் இரக்கத்தைப் போதிப்பதை விட, இரக்கமற்ற வர்களுக்கான சவால், தீர்ப்புப் பற்றியே இயேசு அதிகம் போதிக்கிறார்.

**பாவம் பற்றிய கண்ணோட்டங்கள்**

காணாமற்போன மகன் உவமையைச் சற்று ஆழமாகச் சென்று ஆராய்வோம்: இந்த உவமை இளைய மகன் தந்தையிடம். "அப்பா. சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும்" (லூக் 16:12) என்று விண்ணப்பிப்பதுடன் தொடங்குகிறது.

**முதல் கருத்து:**

நல்லவைகளை கெட்டவற்றிற்குப் பயன்படுத்துவதில் பாவம் அடங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, கடவுள் கொடுத்த பேச்சாற்றலை புறணி பேசவும், நற்பெயரைக் கெடுக்கவும், பொய்யாணையிடவும் மற்றும் பொய் சொல லவும் பயன்படுத்துதல், இளைய மகன் தந்தையிடம் முறையற்ற விண்ணப்பத்தையோ, தீய வேண்டுத லையோ முன்வைக்கவில்லை. தந்தை தனக்குத் தரப்போகிற சொத்தின் பங்கை முன்பாகவே தரும்படிக் கேட்கிறான். அதில் தவறொன்றும் இல்லை. ஆனால், அவன் பெற்றுக் கொண்ட செத்தையெல்லாம் தாறு மாறாக வாழ்வதில் செலவிட்டு பாழாக்கியதில்தான் பாவம் செய்தான்.

**இரண்டாவது கருத்து:**

கடவுளை விட்டுத் தொலைவில் செல்லுதல், இளைய மகன் தவறு செய்தபோது 'தொலை நாட்டில்' இருக்கி றான். பாவம் செய்கிறவர்கள், அதை தொடர்ந்து செய்ய விரும்புகிறவர்கள் கடவுளை விட்டு வெகு தொலைவில் இருக்கும்போதே செய்கின்றனர். 'இளைய மகன் தந் தையை விட்டுத் தொலைநாட்டிற்கு நெடும் பயணம் சென் றான்' என்கிறார் நற்செய்தியாளர், பாவம் செய்கிற நாம் பாவத்தை விட்டுவிட முயற்சி செய்தாலும், பாவம் நாள டைவில் நம்மை முற்றிலுமாக ஆக்கிரமித்து முழு அழிவுக்கு (பன்றி மேய்க்கும் நிலைக்கு ) இட்டுச் செல்லும்,

**மூன்றாவது கருத்து:**

பாவம் நம்மை அடிமையாக உணரச் செய்யும், குடிகாரர்கள் குடிக்கத் தொடங்கும் காலத்தில், "நான் எவ்வளவு குடித்தா லும் நிலையாக இருப்பேன். என்னால் குடிக்காமலும் இருக்க முடியும்" என்பார்கள். ஆனால் நாளடைவில் குடிக்கு அடிமையாகி, குடியைக் கைவிட முடியாத தொடர் குடிகாரர்கள் ஆகிவிடுவர்.


**இறுதிக் கருத்து:**

காணாமல்போன மகன் கண்கள் திறக்கப்பட தன்னுணர்வுக்குத் திரும்புகிறான். 'அறிவு தெளிந்த வனாய்' மனம் வருந்துகிறான். பாவிகள் பல வேளை-களில் நரக வேதனை குறித்த பயத்தில் பாவத்திற்காக மனம் வருந்துவது மேலோட்டமான மனவருத்தமே! உண்மையான மனவருத்தம் என்பது, தனது பாவம், அனைத்தையும்விட தாம் அதிகம் அன்பு செய்யும் கடவுளையும், அவரது திருச்சபையையும், காணாமல் போன மகனின் மன வருத்தத்தில் அப்பாவைக் காயப் படுத்திவிட்டதே என்ற உளப்பூர்வமான உணர்வில் உரு வாகும் மனவருத்தம் ஆகும். இப்படிப்பட்ட மனவருத்தத்து டன் இறைவனின் திருச்சபையிடம் ஒப்புரவு அருந்தியா கப்பட்டது. தவறு செய்தவர்கள் சாக வேண்டும், தவறு செய்யாதவர்கள் வாழ வேண்டும் என்ற மனநிலை. இளைய மகனை இழந்து தவித்த, தேடிக் கொண்டிருந்த அப்பாவின், தத்தளிக்கும் தந்தையின் தவிப்பை கூட இருந்தும் மூத்த மகன் உணரவே இல்லை. தம்பி காணா-மல் போனது பற்றி அவனுக்கு எவ்வித அக்கறையும் இல்லை!

புனித பவுலடியார், "பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இக்கூற்று உண்மை யானது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது - அந்தப் பாவிகளுள் முதன்மையான பாவி நான்" (1திமொ 1:15) என்கிறார். பரிசேயர்கள் போல் கடவுளின் இரக்கத்தையும், மனிதனின் பலவீனத்தையும் நாம் அனைவரும் பாவிகள் என்பதை ஏற்க முடியாத கடின மனத்தையும் கைவிட்டு, நான் பாவி. இறைவனின் மன்னிக்கும் இயல்பு மாறாதது என்பதை உணரும் அருள் வேண்டி செபிப்போம்...

## பரீட்சை எழுதுவோருக்கான செபம்


ஞானத்தின் ஊற்றே இறைவா! / கல்வியின் பாதுகாவலராம் / கனவின் புனித சூசையப்பர் திருத் தலத்தில்/ புதுமைமிகு சுரூபத்துக்கு முன் நிற்கும் / மாணவ-மாணவியர்களையும், / சிறப்புத் தேர்வு களை மேற்கொள்ளும் / மாணவர்களையும் / கனிவு டன் கண்ணோக்கும். / எங்களது பாடசாலை வாழ் விலும், / கல்விபயிலும் தருணங்களிலும் / தடுமாறிய போதெல்லாம் / கனவின் புனித சூசையப்பர் வழி யாக / பல நன்மைகளைப் பொழிந்து வழிநடத்தி வந்துள்ளதை நினைத்து நன்றி நவில்கின்றோம். எங்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்வு களை / எழுதவிருக்கும் நாங்கள் / இந்த இறுதி நாட்களில் / எங்களின் பாடங்களைக் கடின முயற்சி யுடன் படித்து / தேர்வுகளைச் சிறப்பாக எழுதி / நல்ல




மதிப்பெண்களுடன் வெற்றிபெற உதவி செய்யும். / எங்களுக்குத் தேவையான ஞானத்தையும் / நினை வாற்றலையும் / தெளிந்த மனதையும், உடல் உள்ள வலிமைகளையும் / எங்களுக்கு கனவின் புனித சூசையப்பர் வழியாக வழங்கியருளும். / ஞானத்தின் இருப்பிடம் / கனவின் புனித சூசையப்பரே / எங்களுக் காக வேண்டிக் கொள்ளும் / ஆமென்.

## தேவை தபசு!


உண்ணாமல் இருப்பது அல்ல தபசு
உன்னதரோடு இருப்பதுதான் தபசு
தாடியுடன் இருப்பது அல்ல தபசு
டாடியுடன் இருப்பதுதான் தபசு
ஊன் வெறுப்பது அல்ல தபசு
உன்னை வெறுப்பதுதான் தபசு
சிகரெட், தண்ணி வெறுப்பது அல்ல தபசு
சீக்ரெட் பாவங்களை வெறுப்பதுதான் தபசு
பூ அணியாமல் இருப்பது அல்ல தபசு
இரட்சிப்பை அணிவதுதான் தபசு
மாம்ச உணவை வெறுப்பது அல்ல தபசு
மாம்சீகத்தை வெறுப்பதுதான் தபசு
நாற்பது நாள்களுக்கு மட்டும்
தேவை அல்ல தபசு
வாழ்நாள் முழுவதும் தேவை தபசு!







# தவக்காலம் ஒரு வழிபாட்டுப் பார்வை



**"இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" என்கிறார் ஆண்டவர். "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர் நீடிய பொறுமையுள்ளவர், பேரன்பு மிக்கவர் செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர்."**

(யோவே 2: 12, 13.)

தவக்காலம் என்றதும் நாம் பலரும் பலவாறு சிந்திக்கத் தொடங்குகின்றோம். சிலருக்கு அது கசப்பாக இருக்கிறது, பலருக்கு அது ஓர் அருளின் காலமாக இருக்கிறது. சிலர் அதைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை ஆனால் பலர் அதைத் தமது வாழ்வின் அனுபவங்களோடு இறை அனுபவத்தைச் சேர்த்து சிந்திக்கின்றனர். சிலருக்கு அது ஒரு சடங்காக இருக்கின்றது, ஆனால் பலருக்கு அது தியாகம் நிறைந்த காலமாக இருக்கின்றது.

வழிபாட்டு நாட்காட்டி எமக்கு ஆறு வாரங்கள் அடங்கிய ஒரு காலத்தைத் தந்து இயேசுக் கிறிஸ்துவோடு நெருங்கிய முறையில் பயணிக்க அழைக்கின்றது. ஏனைய காலங்களைப் போல இந்தக் காலம் மிக முக்கியமான காலமாகும். கிறிஸ்துவின் பாஸ்கா மறை பொருளைச் சிந்திக்க அழைக்கும் காலமாகும். கிறிஸ்து எமக்காகப் பாடுகள்பட்டு, அவமானங்களை தம்மில் ஏற்று, இரத்தம் சிந்தி மரித்து, உயிர்த்து எமக்கு விடுதலை கொடுத்த அந்த வரலாற்று உண்மையைத் தியானிக்க அழைக்கும் காலம் இது. எமக்கு மீட்பின் பாதையைக் காட்டும் காலம்.

தவக்காலம் திருநீற்றுப் புதனோடு ஆரம்பமாகின்றது. மிக ஆரம்ப காலங்களிலே இதை விபூதிப்புதன் அல்லது விபூதி விழா என்று அழைத்தனர். 'திருநீறு' என்பது தமிழருக்கே உரித்தான அழகான சொல். இச்சொல்லை அதிகமாக இந்துக்கள் தான் பாவிக்கின்றனர். திருநீறு அல்லது விபூதி என்றும் அழைக்கலாம். இதை அதிகமாக இந்துக்கள் நெற்றியில் இட்டுப் புனித அடையாளமாகப் பயன்படுத்துவர். வேதாகமத்தில் "சாம்பல்"என்கின்ற வார்த்தை அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. (காண்க: விப 9:8, எண் 19:1-10, எபி 9:13, 2சாமு 13:19, யோபு 2:8 இந்த இடத்தில் எபிரேய விவிலியம் 'எபெர் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது, இதற்கு இணையாக கிரேக்க 'ஸ்பொதொஸ்" என்ற சொல்லை பயன்படுத்துகிறது) இலத்தின் மொழியில் 'Cineres' என்று அழைக்கப்படுகின்றது. 'Cineres' என்றால் சாம்பல் என்று அர்த்தம் பெறுகின்றது. ஆங்கிலத்திலே 'Ash Wednesday' என்றும் அழைக்கலாம். Ash என்றால் சாம்பல் என்று அர்த்தம் பெறுகின்றது. அனைத்துமே அதன் அர்த்தத்தையும் அந்நாளுக்குரிய மகத்துவத்தையும் குறித்துக்காட்டுகின்றது.

தொடக்கக் காலத்தில் கத்தோலிக்கர்களும் நெற்றியில் இவ்வாறே திருநீற்றை அணிந்து சென்றுள்ளனர், ஆனால், கலாபனைகளின் காலங்களிலே தங்களைக் கத்தோலிக்கர் என்று அடையாளம் காட்டக்கூடாது என்பதற்காக அதை அதிகம் தவிர்த்தனர். இந்தத் திருநீற்றை நெற்றியில் அணியும் போது அது இன்னுமொரு அர்த்தத்தையும் கொடுக்கின்றது. நாம் அனைவரும் 'தூசு'. சாம்பலைப்போல் காணாமல் போய்விடுவோம், மறைந்து போய் விடுவோம் என்கின்ற கருத்தும் தெளிவாகின்றது. அத்தோடு எமது வாழ்வும் மிக இலகுவாக உடையக்கூடியது என்பதையும் நினைவூட்டுகின்றது. 'நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும்வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய். நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்"(தொடக்க நூல் 3:19), என்று வேதாகமத்தின் தொடக்கத்திலே மனிதனை இறையுறவில் வளர்க்க, ஆழப்படுத்த அவன் தன்னைத் தாழ்த்தி, பணிவிடை செய்து வாழ வேண்டும் எனக் குறித்துக் காட்டுகின்றது இந்தத் தவக்காலம். இதே இறைவார்த்தையைச் சொல்லியே ஒவ்வொருவரின் நெற்றியில் சாம்பலை பூசி தவக்காலத்தை ஆரம்பிக்கின்றனர்.

'Dies Cinerum' அதாவது 'சாம்பலின் நாள்' என்கின்ற வார்த்தை தான் ஆரம்பத்தில் பாவிக்கப்பட்டு வந்துள்ளது. 8ம் நூற்றாண்டுக்கே உரித்தான கிறகோறியன் சக்ரமென்ரரி (Gregorian Sacramentary) அதாவது கிறகோரியன் திருப்பலி நூலிலே இதனது ஆரம்பம் காணப்படுகின்றது. திருப்பலி தொடங்கும் முன், அனைத்து இறை மக்களும் ஆலயத்திற்குள் காணப்படும் பீடத்தை நோக்கிச் செல்வர். அங்கே குருவானவர் ஏற்கனவே ஆசீர்வதிக்கப்பட்ட சாம்பலை ஒவ்வொருவர் நெற்றியிலே பூசுவார். குருக்களுக்கு அவர்களது உச்சந்தலையில் பூசுவர். இந்தச் சாம்பல் குருத்து ஞாயிறு தினத்தில் சேர்க்கப்பட்ட ஓலைகளை எரித்துப் பெறப்பட்டதாகும். இதன்போது செபங்கள் சொல்லப்படும், ஆசீ நீர் தெளிக்கப்படும், தூபம் காட்டப்படும்.

எட்டாம் நூற்றாண்டிலே இவ்வகையான வழிபாடு ஆரம்பமானதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்ற போது நாம் கொண்டாடு கின்ற இந்த வழிபாடுகள் அனைத்தையும் சர்வசாதாரணமாக நிறைவேற்றவோ அல்லது அதில் பங்குபற்றவோ முடியாது.

தவக்காலத்தின் தொடக்க வழிபாடான திருநீற்றுப் புதன் திருப்பலியின் திருக்குழும மன்றாட்டு ஓர் அழகான அர்த்தத்தைக் காட்டுகின்றது. இறுதியாக வெளியிட்ட திருப்பலி நூல் வரைக்கும் இது 'சபை மன்றாட்டு' என்றே அழைக்கப்பட்டது. அதன் பின் இதை 'திருக்குழும மன்றாட்டு' என்று புதிய மொழி பெயர்ப்பின் படி அழைக்கப்படுகின்றது. இலத்தினிலே இதை Collecta என்று கூறலாம். அதாவது 'கூட்டம்' அல்லது 'திருக் கூட்டம்' என்று பொருள்படும். திருக்குழும மன்றாட்டு திருவழிபாட்டிலே மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இதுவே வழிபாட்டின் சாராம்சம் எனக் கூறலாம். இக்காலத்தின் உன்னத தேவையையும், ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தின் விளைவாக மனித குலத்திற்குக் கிடைத்த பேரிழப்பை நிவர்த்தி செய்யவும், இறை-மனித உறவை மீண்டும் கட்டியெழுப்பவும் இதிலே பயன்படுத்தப்படும் சொற்கள் ஒரு வெளிச்சத்தைத் தருகின்றன. 1963ம் ஆண்டிற்குப் பின்னரான, அதாவது இரண்டாம் வத்திகான் சங்கத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் வெளிவந்த திருப்பலி நூல்களிலே இச்செபம் அதனது அளவிலும், பண்பிலும் மொழிபெயர்ப்பிலும் மாறுபட்டுள்ளது என்பது உண்மையே.

**"ஆண்டவரே, உம்முடைய விசுவாசிகள் இந்தப் புனித நோன்புக் காலத்தைத் தகுதியான பக்தியுடன் துவக்கி, அசையாத பற்றுறுதியுடன் அதில் முற்றும் நிலைத்திருக்க அருள்புரியும்""**

(திருப்பலிப் புத்தகம்: பதிப்புரிமை: தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1967)

**என்றென்றும் இரக்கமுள்ள இறைவா, கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தைப் புனித நோன்புகளுடன் தொடங்க எங்களுக்கு உதவி அளித் தருளும். தீய சக்திகளை எதிர்த்து நாங்கள் புரியும் போரில் எங்களையே ஒறுத்து உதவிபெறுவோமாக...** (பூசைப் புத்தகம் 1979)

**என்றென்றும் இரக்கம் காட்டும் இறைவா! உம் திருமகனின் இறப்பையும் உயிர்ப்பையும் தகுதியுடன் கொண்டாட, எங்களை ஆயத்தம் செய்ய இந்த நாற்பது நாட்களைக் கொடுத்துள்ளீர். உமது இரக்கத்தில் நம்பிக்கை வைத்து நாங்கள் நோன்பிருந்து உண்மையான மனமாற்றம் அடையவும், எல்லாவித தீமைகளையும் எதிர்த்துப் போராடவும் துணைபுரிவீராக..**

(திருப்பலி நூல் 2016)

**ஆண்டவரே, புனித நோன்புகளின் வழியாகக் கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தைத் தொடங்க எங்களுக்கு உதவியருளும் அதனால் ஆன்மீகத் தீமைகளுக்கு எதிராக நாங்கள் போரிட்டு, தன்னடக்கத்தின் உதவியால் காக்கப் படுவோமாக.** (திருப்பலி நூல் 2020)

1967, 1979, 2016 மற்றும் 2019ம் ஆண்டுகளில் வெளிவந்த திருப்பலிக்கான நூல்களில் பெறப்பட்ட செபங்களில் இருந்தே எனது ஆய்வை தொடருகின்றேன். கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தை, நோன்புகள் வழியாகத் தொடங்க முடியும் அல்லது தொடங்க வேண்டும் என்பதே இந்த செபத்தின் சாராம்சமாகும். தவக்காலத்தினை சுருங்கக் கூறுவதாயின்



வாழ்க்கை என்பது போராட்டம். ஆகவே, அதை நோன்பின் மூலமே வெல்ல முடியும். இந்த செபம் 1979ம் ஆண்டின் திருப்பலி நூலிலும், 2019ம் ஆண்டு வெளிவந்த திருப்பலி நூலிலுமே காணப்படுகின்றது. இது உரோமைத் திருப்பலியில் காணப்படுகின்ற இலத்தீன் செபத்தை அடியொட்டியதாகும். ஏனையவைகள் எங்கிருந்து உருவாகின அல்லது எப்படித் தோற்றம் பெற்றன என்பது தெளிவற்றுக் காணப்படுகின்றது.

2019ம் ஆண்டு வெளிவந்த திருப்பலி நூலின் படி 'ஆண்டவரே, புனித நோன்புகளின் வழியாகக் கிறிஸ்தவ வாழ்வின் போராட்டத்தைத் தொடங்க", என்று ஆரம்பிக்கின்ற இந்தச் செபத்தில் வருகின்ற போராட்டம் என்கின்ற சொல் ('Campaign' in English) ஒரு யுத்த களத்தில் இருந்து போராடுகின்ற என்ற அர்த்தத்தைக் குறிக்கின்றது: 'Presidia militiae christianae. Presidium' என்கின்ற இலத்தின் சொல் பாதுகாக்கின்ற படை அல்லது யுத்த பாதுகாப்பு என்கின்ற அர்த்தத்தை குறிப்பிடுகின்றது. போர் முனையிலே எதிரியை சந்திக்கப் பெறப்படும் யுத்த பயிற்சிகள் அல்லது அதுசார்ந்த ஒழுக்கவியல் கடமைகள் என்றும் அர்த்தம் பெறலாம். ஆகவே, கிறிஸ்தவ வாழ்வின் போராட்டம் என்பது யுத்த காலத்திலே போராடுவது போன்று, எதிரியான சாத்தானை வென்றொழிக்க போராடுவது போலாகும் என்கின்ற மிக ஆழமான கருத்துக்களை இந்தத் திருக்குழும மன்றாட்டுத் தருகின்றது. இந்த எண்ணங்களோடும் இறை வேண்டலோடும் தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம்.

தவக்காலம் பற்றிய சிந்தனைகள், எண்ணங்கள் அப்போஸ்தலருடைய காலத்தில் இருந்தே கருக்கொண்டது. அதாவது இயேசுவின் மரணத்திற்குப் பின் அவரது உயிர்ப்பு மற்றும் அவரது விண்ணேற்புக்கு பின்னரான கலப்பகுதியிலே, இயேசுவை அறிவிக்கவும், அவரது துன்பங்களில் பங்கேற்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக உரோமையர் 6இல் கிறிஸ்துவினுடைய உயிர்ப்பு விழாவிற்கு முன் நோன்பிருப்பது என்பது மிகப்பழமையான நடைமுறையாகும். அந்நோன் பிற்குரிய இடைவெளி காலத்திற்குகாலம், இடத்திற்கு இடம் வேறுபட்டதாகக் காணப்பட்டது. 325ம் ஆண்டு கூடப்பட்ட நீசேயா பொதுச்சங்கத்திற்கு பிறகு தான் தவக்காலம் நாற்பது நாட்களைக் கொண்ட ஒரு காலமாக கருதப்பட்டது. தெர்துல்லியன் (Tertullian) இந்தப் பாஸ்கா விழாவைப்பற்றிய தனது கருத்தில், கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா தான் திருமுழுக்கு அருளடையாளத்திற்கான உண்மையான புனிதமான நாளாகும் என்று குறிப்பிடுகின்றார். டிடாக்கே (The Didache - முதல் நூற்றாண்டுக்கே உரித்தான இந்தப் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின் படிப்பினை அடங்கிய நூல்) என்கின்ற நூலிலே திருமுழுக்குப் பெறவேண்டியவர் நோன்பு இருக்கும்படி குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

'தவக்காலம்' என்கின்ற வார்த்தை கூட அக்காலத்தின் தன்மை பற்றி விபரித்துக் கூறுகின்றது. ஆனால் Quadragesima எனும் இந்த இலத்தின் வார்த்தை அதன் காலத்தின் அளவைக் குறித்துக் காட்டுகின்றது. இக்காலம் நாற்பது நாட்களைக் கொண்டது எனும் கருத்துத் தெளிவாகின்றது. தவக்காலம் என்பது நாம் தவம் செய்து, ஒறுத்தல் இருந்து, ஆழமாக செப தியானத்தில் எம்மை அர்ப்பணித்து, எமது பாவத்திற்காகப் பரிகாரம் செய்யவும் அழைப்பு விடுக்கும் காலமாகும். தவக்காலம் வாழ்வோடு கூடிய ஒரு திருயாத்திரை. எமது இறை உறவின் ஆழத்தையும் அகலத்தையும் மீட்டிப் பார்க்கின்ற ஒரு காலம் எமது ஆன்ம தேடலின் அர்த்தத்தை அனுபவிக்கின்ற காலம். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். (யோவா: 3:16) இந்த அன்பை அனுபவிக்க எமக்குத் தரப்பட்டிருக்கும் ஓர் அழகிய காலம். தவக்காலத்தில் தொடக்க நாளாகிய திருநீற்றுப் புதன் அன்றும் அதன் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாமிச தவிர்ப்பை அனுசரிக்க வேண்டும். திருநீற்று புதன் அன்றும் பெரிய வெள்ளி அன்றும் ஒரு சந்தி சுத்த போசனம் அனுஷ்டிக்க வேண்டும். கிறிஸ்துவின் பாடுகள் மரணம் மட்டும் அல்ல அவரது உயிர்ப்பிலும் தகுதியான முறையிலே பங்கெடுக்கவும் எங்களை ஆயத்தம் செய்கின்றது.

## ஏன் சிலுவைப்பாதை?

சிலுவைப்பாதைகள் என்பது இயேசுவின் பாடுகள், மரணம், மற்றும் உயிர்ப்பைத் தியானித்து அவரோடு பயணிக்கும் அன்பின் பாதை. இதை 'Via Crucis' என்று இலத்தின் மொழியிலே அழைக்கின்றோம். பதின்நான்கு தலங்களைக் கொண்டு அவற்றை ஒழுங்கமைய இயேசுவின் பாடுகளின் பாதையாக சிந்திக்க சிலுவைப்பாதை அழைக்கின்றது. இது கத்தோலிக்க பாரம்பரிய முறைப்படி பின்பற்றப்பட்டு வருகின்ற ஓர் அழகான பொது வழிபாடாகும் (Paraliturgy). எருசலேமில் தான் இந்த பக்திமுயற்சி ஆரம்பமாகியிருக்கலாம். ஆனால் அது பதின்னான்கு தலங்களை கொண்டதாக அமையவில்லை. காலப்போக்கில், பிரான்சிஸ்கன் மறைபரப்புத் துறவிகளால் இதை உலகறியச் செய்திருக்கலாம் என்றும், 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இது அழகான தோற்றம் பெற்று 14 தலங்களாக உருப்பெற்றது என்றும் நம்பப்படுகின்றது.

இந்த 14 நிலையங்களும் இயேசுவின் துக்கமான அல்லது வியாகுலம் நிறைந்த வாழ்வின்கடைசி பகுதியை படம்பிடித்துக் காட்டுகின்றது. சிலுவையின் வழி தான் மீட்பு என்கின்ற உண்மையைக் காட்டவும் இயேசுவின் காயங்களோடு, அவரது துன்ப துயரங்களோடு பயணிக்கவும் இந்தச் சிலுவைப் பாதை அழைக்கின்றது. இது ஓர் ஆன்மீக யாத்திரை. இயேசு, தனது அளவிட முடியாத அன்பை சிலுவைச் சாவின் மூலமே வெளிப்படுத்தினார் என்பதை சிந்திக்க தூண்டுவது இந்த சிலுவைப்பாதை. இயேசுவைச் சிலுவையில் அறைந்தது யார் என்பது எமது கேள்வியாக மாறக்கூடாது மாறாக இயேசுவை சிலுவையில் அறைந்தது என்ன? எனடபதே எமது சிந்தனையாக இருக்க வேண்டும். சிலுவைப்பாதயை ஒவ்வொரு வருடமும் வருகின்ற தவக்காலத்தில் மாத்திரம் சிந்தித்துத் தியானிக்கவேண்டும் என்றல்ல, மாறாக, அது வாழ்வின் பயணம். எமக்குத் தேவையான நேரங்களில் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை பற்றி சிந்திக்க தியானிக்க கடமையும், உரிமையும் உண்டு. ஆனால், தவக்காலங்களிலே இவற்றைக் கடைப்பிடிப்பது இன்னும் அதிக அர்த்தத்தைத் தருகின்றது.

## சிலுவைப்பாதையினால் கிடைக்கும் நன்மைகள் ஏராளம்.

திருயாத்திரைகள் மேற்கொண்டு இச்சிலுவைப்பாதயை ஒறுத்தல் முயற்சியாக மேற்கொள்ளும் போது இதன் பலன் அதிகரிக்கின்றது. இந் நாட்களில் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவது இறைவனையும் எங்களையும் இன்னும் அதிகமாக ஒன்றிக்கின்றது. இதனால் ஒருவர் பாவத்தின் கட்டுக்களில் இருந்து விடுதலை பெறுகின்றார், மனதிலே தூய்மையை அடைய வழிசமைக்கின்றார். பரிசுத்த திருத்தந்தையுடைய கருத்துக்களுக்காக மன்றாடுவது, மறைமாவட்ட ஆயரினுடைய சுகிர்த கருத்துக்களுக்காக மன்றாடுவது இப்பலனை அதிகமாக பெற்றுக்கொள்ள

அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

துணை நிற்கின்றன. பதின்னான்கு நிலையங்களையும் முழுமையாக பங்கு பற்றி முடிப்பவருக்கு பரிபூரண பலன் கிடைக்கின்றது. சிலுவைப்பாதை செய்த தினத்தில் நற்கருணை பெற்றால் அப்பலன் இருமடங்காகின்றது.

**இந்தத் தவக்காலத்தின் திருவழிபாடு அதன் உட்பொருளைச் சிந்திக்கவும் தியானிக்கவும் எமக்கு அழைப்பு விடுக்கின்றது.**

## 1. நோன்பிருத்தல்

ஆரம்ப கிறிஸ்தவ சந்நியாச வாழ்விலே நோன்பிருத்தல் என்பது சர்வ சாதாரண ஒரு நடைமுறையாகவே இருந்து வந்துள்ளது. இது ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து தான் தவக்காலத்திற்குரிய ஒரு தனி முயற்சியாக உருவாக்கப்பட்டது. ஆரம்பத்திலே புதன்கிழமைகளிலும், வெள்ளிக் கிழமைகளிலும் நோன்பிருந்து செபிப்பது வழக்கம். தற்போதும் கூட எமது கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வெள்ளிக்கிழமை உபவாசம் நோன்பிருந்து திருச்சபையின் கட்டளைகளை அனுசரிப்பது பெருமை பாராட்டக்கூடியதே. இது அப்போஸ்தலர்களுடைய காலத் தில் இருந்தே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அவர்களது காலத்திலே புதன் கிழமைகளிலும், மேலும் வெள்ளிக்கிழமைகளிலும் நோன்பிருந்தனர் என்பது டிடாக்கே நூலிலிருந்து தெளிவாகின்றது. நோன்பிருத்தல் என்பது ஒரு தூய கடமையாகும். எமது உடலைக் கட்டுப்படுத்தி வாழவும் அதன் பாவ இச்சைகளில் இருந்து எம்மை விடுவித்து தூய வாழ்விற்கு எம்மை இட்டுச் செல்கிறது.

குறிப்பாக இந்த நோன்பிருப்பது என்பது, உயிர்ப்பு ஞாயிறுக்கு முன் வருகின்ற ஆறாவது ஞாயிறு தினத்தில் கொண்டாடப்பட்டது. இது இயேசுவின் நாற்பது நாள் நோன்பிருந்து சாத்தானால் சோதிக்கப்பட்ட நிகழ்வைத் தெளிவாக்குகின்றது. ஞாயிற்றுக்கிழமை ஆண்டவரின் நாள். அன்றைய தினத்தில் நோன்பிருக்க முடியாது. இதனால் அதை விடுத்து வருகின்ற 36 நாட்களும் நோன்பின் நாட்களாகும். இந்த நடைமுறை ஏழாம் நூற்றாண்டிலே அனுசரிக்கப்பட்டு, திரு நீற்றுப் புதன், பாவமன்னிப்பு வழிபாட்டிற்கு முன் சேர்க்கப்பட்டது.



புனித தோமஸ் அக்குவினஸ் ஏன் உண்ணா நோன்பிருக்க வேண்டும் என்று முக்கியமான மூன்று விடயங்களைக் கூறுகின்றார். முதலாவதாக, எமது உடலின் காம உணர்வுகளைக் கட்டுப்படுத்துகின்றது. ஏனெனில் நோன்பைக் கடைப்பிடிப்பது என்பது கற்புக்கான பாதுகாவலாகும். மாமிச தவிர்ப்புக்கள், மதுபானங்களை தவிர்ப்பது கற்பு நெறிக்கான வழிகளாகும். இரண்டாவதாக, விண்ணக விடையங்களை பற்றிச் சிந்திக்க மனம் இன்னும் சுதந்திரமாக உயரக்கூடும் என்பதற்காக நோன்பு கடைப்பிடிக்க வேண்டும். தானியேல் இறைவாக்கினர் மூன்று கிழமைகள் நோன்பிருந்த பிறகு இறைவனின் வல்லமையுள்ள வெளிப்பாடு கிடைக்கப் பெற்றார். (தானி: 10). மூன்றாவதாக, யோவே: 2:12 கூறுவதைப்போல பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டி நாம் உண்ணா நோன்பிருக்க வேண்டும். அதாவது எமது பலவீனத்தினால் கட்டிக்கொண்ட பாவங்களுக்குப் பரிகாரமாக நோன்பிருப்பது துணையாகின்றது.

"மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப் படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்று விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும் போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறை வாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம் மாறு அளிப்பார்".

(மத்: 6:16-18)

## 2.சோதனைக்காலம்:

இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டார். இயேசு இறை மகனாய் இருந்தும் ஏன் சோதிக்கப்பட்டார் அல்லது அவர் சோதனையை ஏற்றுக் கொண்டார் என்றே சொல்லவேண்டும். இதற்கான காரணங்கள் பல உள்ளன. முதலாவதாக பாவச்சோதனைக்கு எதிராக நாம் விழாதபடிக்கு எம்மைப் பலப்படுத்தவே அவர் சோதனையை ஏற்றுக்கொண்டார். இயேசுவினுடைய இந்தச் சோதனையினூடாக நாம் விடுதலை பெறுவதே அவரது எண்ணமாக இருக்கின்றது. அவரது மரணத்தின் மூலம் எமது மரணத்தை வென்றார். ஆகவே, இந்தப் பாவச் சோதனையால் எமது வாழ்வை மீட்டுக்கொண்டார். இரண்டாவதாக, நாம் பாவச்சோதனைக்கு உட்படுத்தப்படும் போது அது எமக்கு ஓர் எச்சரிக்கையை தருகின்றது. நாம் எவ்வளவிற்குத் தூய்மையோடு இருக்கின்றோமோ அவ்வளவிற்கு சாத்தானின் பார்வை அதிகமாகவே இருக்கும். இயேசு திருமுழுக்குப் பெற்ற பிறகுதான் சோதிக்கப்பட்டார். இதனால் யாரெல்லாம் திருமுழுக்கினூடாக இறைவனின் பிள்ளையாக, பாவம் கழுவப்பட்டு தூய வாழ்வை சுவைக்கின்றார்களோ, அவர்களை தீமையின் வழியில் எத்தனிப்பதே தீயவனின் செயலாகின்றது. ஆகவே தான் பாவச்சோதனை ஒரு எச்சரிக்கையாக இருக்கின்றது. புனித அகுஸ்தினார் கூறுவது போல கிறிஸ்து பாவச்சோதனையை எதிர்கொள்ள தன்னை விட்டுக்கொடுத்தார். இதனால் நாம் அச்சோதனையிலிருந்து விடுபட அவரே இணைப்பாளராகச் செயற்படுகின்றார்.

இறுதியாக, சோதனைகளிலே கிறிஸ்துவின் இரக்கம் நிறைந்திருக் கின்றது. 'ஏனெனில், நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல மாறாக, எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர் எனினும் பாவம் செய்யாதவர்,' எபி 4:15. எமது சோதனைகள் என்ன? பணம், ஆசைகள், அதிக உணவு, காம இச்சைகள், அதிகாரம், சுரண்டல், இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். நாம் செய்யவேண்டியவைகள் செய்யத் தவறும் போது அது பாவமே. ஆகவே, இவற்றைப் பற்றிச் சிந்திக்கவும், எமது ஆழமான விசுவாச வாழ்வைக் கிறிஸ்துவில் கட்டியெழுப்பவும் இந்தக் காலம் உதவிசெய்கின்றது.


இயேசு இறந்தது மட்டும் அல்ல அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவரது மாட்சி இந்த உலக மக்களுக்கு ஒரு விடுதலை. உலகில் எப்போது பாவம் தோன்றியதோ அப்போதே இறைவன் தனது மக்களை மீட்க ஒரு திட்டத்தை வகுத்தார். தனது சாயலாகவும் பாவனையாகவும் படைத்த போது அவர்களை இறுதி வரை வாழ்விக்க வேண்டும் என்று தான் தனது திட்டத்தில் இறுதியாகத் தனது மகனை அனுப்பினார்: (பிலி: 2: 6-8) கடவுள் எம்மேல் கொண்ட இந்த அளப்பரிய அன்பு தான் எம்மையும் அவரது மீட்பு திட்டத்தில் பங்கு கொள்ள அழைக்கின்றது. இந்த அழைப்பிலே கிறிஸ்துவையும் அவர்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவும் அவருடைய துன்பங்களில் பங்கேற்று, சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன். அப்பொழுதுதான் நானும் இறந்தோருடன் உயிர்த்தெழ இயலும், (பிலி: 3:10,11)

## 3. திருமுழுக்கு

ஆறு வாரங்களைக் கொண்ட இந்த தவக்காலத்தில் இன்னும் ஒரு விசேட நிகழ்வு காணப்படுகின்றது. Catechumens எனப்படுவோர் அதாவது திருமுழுக்கு பெற இருப்போர் தங்களை இந்த ஆறு வாரங்களுக்கு ஆயத் தம் செய்வர். இந்தக் காலத்தின் தலையான நாளாகிய பாஸ்கா ஞாயிறு அல்லது உயிர்ப்பு ஞாயிறு அன்று திருமுழுக்குப் பெறுவர். முதல் நான்கு நூற்றாண்டுகளில் இந்தத் திருமுழுக்குக் கொண்டாட்டம் பெந்த கொஸ்தே நாளன்று கொடுக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இதை பற் றிய ஆழமான விளக்கங்கள் அப்போஸ்தலிக்க பாரம்பரியம் Apostolic Tradition 215 C.E. என்கின்ற நூலிலே தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது (The Apostolic Tradition, Paul F. Bradshaw Maxwell E. Johnson, L. Edward Phillips, Fortress Press). இந்த நாளிலே இத்திருமுழுக்கின் ஊடாக கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கிறிஸ்தவ குழுமத்தோடு ஒன்றிணைகின்றமை திருச்சபையின் வழிபாட்டிற்கும் பாரம்பரியத்திற்கும் பெருமை சேர்கின்றதாக அமைகின்றது. இன்று கத்தோலிக்க திருச்சபையும் கீழைத்தேய திருச்சபையும் இந்தத் திருச்சபையின் ஆரம்ப கால பாரம்பரியத்தினைக் கடைபிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் தான் உயிர்ப்பு ஞாயிறு வழிபாட்டிலே திருமுழுக்குக் கொடுக்கின்ற சடங்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 4. இந்த 40 நாட்களிலும் செய்ய கூடியவை

**1. உன்னுடைய நாளை இறை ஆசீர்வாதத்தோடு தொடங்கு.**
**2. ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குச் செல்லத் தவறாதே.**
**3. கிழமையில் ஒரு நாள் சிலுவை பாதை தியானிக்கத் தவறாதே.**
**4. பத்து நிமிடம் இறை வார்த்தையை சிந்திக்க மறவாதே.**
**5. எளிமையாகவும் ஏழ்மையாகவும் வாழப் பழகிக்கொள்.**
**6. கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பைப் பற்றி சிந்திக்க மறவாதே.**
**7. தவம் செய், பிறருக்குக் கொடு.**
**8. மாமிசத் தவிர்ப்பு நாட்களை அனுசரி.**
**9. சினிமா மற்றும் திரைப்படங்கள் பார்ப்பதை முற்றும் குறைத்து விடு.**
**10. மது, புகைத்தல் போன்ற செயல்களிலிருந்து விலகிக் கொள்.**
**11. திரு யாத்திரை செய்துகொள்.**



அன்னை மரியாள் தனது வாழ் நாளெல்லாம் இறைவனோடு பயணித்தவர். இறைவனின் வார்த்தையைக் கேட்டு வாழ்ந்தவர். உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவி பாயும், (லூக்: 2:35) என்ற சிமியோனின் வாழ்த்து அன்னை மரியாவின் வாழ்வை ஒரு வியாகுலம் நிறைந்த வாழ்வுக்குள் அழைத்துச் சென்றது. தனது மகன் அதாவது இறை மகன் இயேசுக் கிறிஸ்து பாடுகள் பட்டு இரத்தம் சிந்தி மரிக்க வேண்டும் என்பது அவர் வாழ்வில் துன்பியல்களாகவே காணப்பட்டன. இயேசுவின் பாடுகளோடு அவர் இருந்தால் இயேசுவின் சிலுவை மரணத்தின் போதும் அவர் இருந்தார். இயேசுவின் உயிர்ப்பிலும் அவள் சாட்சி பகர்ந்தார். 'அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்', (லூக்: 1: 53) எனும்அன்னை மரியாவின் பாடலிலே ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வது என்பது எம்மைத் தாழ்த்தி இறைவனை போற்றி, அவரது வல்ல செயல்களை நினைத்துப் பெருமை கொள்ளவது என்பதை குறிக்கும். அன்னை மரியாளோடு பயணிக்கும் இந்தத் தவக்காலத்தில் நாம் நிறை வாழ்வுக்குக் கொண்டுசெல்ல உழைக்க வேண்டும். தவம் செய்வோம் தினம் செபமாலை சொல்வோம் பாவத்திற்காகப் பரிகாரம் செய்வோம்.

தவக்காலம் இறைமக்களின் தூய வாழ்வுக்கான அழைப்பினுடாக திருச்சபை தனது தூய்மையைப் புதுப்பித்துக் கொள்கிறது. ஆகவே எமது தூய்மை தான் திருச்சபையின் தூய்மையாகும். நாம் பாவம் செய்யும் போது எமக்கு எதிராக மட்டும் பாவம் செய்வதில்லை, மாறாக எம்மில் உறவாடும் கிறிஸ்துவுக்கு எதிராகவும், திருச்சபைக்கு எதிராகவுமே பாவம் செய்கிறோம். தவக்காலம் எமக்கு நாற்பது நாட்களைக் கொடுத்து, கிறிஸ்துவின் பாஸ்கா மறை பொருளாகிய பாடுகள் மரணம் உயிர்ப்பை தியானித்து மனம் திருந்தி வாழ எம்மை ஆயத்தம் செய்கிறது. இந்நாட்களில் நாம் முழுமையான பாவ சங்கீர்த்தனம் செய்து எம்மை முழுமையாக இறைவனோடு இணைத்து கொள்ளவும் அவரது பாடுகள் நிறைந்த புனித வாரத்தில் பங்கு கொள்ள அழைப்பு விடுக்கின்றது.

*இந்த சிந்தனைகளோடு எமது தவக்காலத்தை ஆரம்பிப்போம். அர்த்தமுள்ள ஆழமான ஒரு பயணத்தை மேற்கொள்வோம்.*

## காவலன் கலசம்




# அவசரகாலப் பதில்

அருட்பணி. செ. அன்புராசா அமதி

அருட்தந்தை செ. அன்புராசா, அமதி அடிகளார் **'என் கேள்விக்கென்ன பதில்!'** என்ற பகுதியை கடந்த வாரம்வரை எழுதிவந்தார். காலத்தின் அறிகுறி–களைக் கருத்தில் கொண்டு அவரின் பதில்கள் **'அவசரகாலப் பதில்'** என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். வாசகர்களாகிய நீங்கள் கேள்விகளைக் கேட்டு பயனடைய இப்பகுதியைப் பயன்படுத்துங்கள். ஆர்

(பிரியன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: உங்கள் பதில்களால் அசத்துகின்றீர்கள்! இப்படியான பதில்களை எப்போது, எங்கிருந்து யோசிக்கின்றீர்கள் என்ற இரகசியத்தைத் தயவுசெய்து கூறமுடியுமா?**

ப: இது, எல்லாருக்கும் தெரிந்த பொது இரகசியம்தான்! நாம் வாழும் இடங்களில், பணிசெய்யும் தளங்களில், வெளியே போய்வருகின்றபோது, அடுத்தவர்களுடன் உரையாடுகின்ற வேளைகளில், பயணங்களின்போது, பொது இடங்களில் மக்கள் கதைக்கின்ற விடயங்களைக் கொஞ்சம் காதுகொடுத்துக் கேட்டு, கண்களைக் கொஞ்சம் திறந்து நம்மைச் சுற்றி நடக்கும் சம்பவங்களைப் பார்த்து, சிந்தித்தால் இப்படியான பதில்கள் வெளி–வரும் என நினைக்கின்றேன்!

(துசி, யாழ்ப்பாணம்)

**கே: 'என் கேள்விக்கென்ன பதில்!' என்ற பெயரை 'அவசரகாலப் பதில்' என மாற்றியிருக்கின்றீர்கள். அதற்கு ஒரு விளக்கத்தினையும் கொடுத்து, 'இது ஒரு பழைய ஏற்பாடு அல்ல, புதிய ஏற்பாடு' எனவும் சொல்லியிருந்தீர்கள். சலமோன் பாப்பையாவின் பாணியில் சொல்வதானால் 'அருமை ஐயா அருமை!'. சரி, அது ஒருபுறமிருக்க, எங்கிருந்துதான் இந்த அறிவு உங்களுக்குக் கிடைக்கின்றது?**

ப: மேலிருந்து!

*(தாசன், யாழ்ப்பாணம்)*

**கே: சமூகங்கள் பிளவுபட்டிருந்தாலும் அவற்றை ஒன்றுசேர்க்க ஊடகங்கள் உதவவேண்டும். அதனைவிடுத்து, எரியும் நெருப்பில் எண்ணைவார்க்கக் கூடாது! எண்ணை வார்க்கின்ற வேலையை யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகை செய்கின்றதுபோல் தெரிகின்றது! இப்பேர்ப்பட்டவர்கள்சமூகத்திற்கு நல்லது செய்கின்றோம் என்று தீமையையே செய்கின்றார்கள்! இவர்கள் திருந்தமாட்டார்களா?**

ப: தாசன், சமூகங்கள் பிரிவினைகளைக் கொண்டிருந்தாலும் செய்திகள் என்பதற்கப்பால், சமூகங்கள் பிளவுண்டு போகாமல் பார்த்துக்கொள்வதும் வழிநடத்துவதும் வழிப்படுத்துவதும் ஊடகங்களின் தார்மீகக் கடனாகும். ஆனால், சிலர் வியாபார வணிக நோக்கங்களுக்காகவும் பெயர் புகழுக்காகவும் சமூகங்களிடையே இடம்பெறும் சம்பவங்களுக்குச் சாயம்பூசி, நிறம்தீட்டி ஒருசிலர் செய்தி வெளியிடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமைகளைக் காண்கிறோம்! இது வேதனைக்கும் கவலைக்கும் உரியது. எனினும், இவர்கள் ஏன் அவ்வாறு செய்கிறார்கள்

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

என்பதனையும் அவ்வாறு அவர்கள் செய்வதன் உள்நோக்கங்கங்களையும் போகப்போகமக்கள்புரிந்துகொள்வார்கள்.

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: சமயங்களுக்கிடையில் சமூகங்களுக்கிடையில் பிரிவினைகளை உண்டுபண்ணச் சிலர் முயலுகின்றார்களே! ஏன்?**

**பதில்:** யோசப், புள்ளியாய் இருப்பதைப் பூதமாகக் காட்டுவதில் சிலர் வல்லவர்கள்! அத்துடன், இல்லாததை இருப்பது போல் கூறுவதில் இன்னும் சிலர் மகா கெட்டித்தனம் உடையவர்கள். அதனால், இவ்வாறு தங்கள் வல்லமையை கெட்டித்தனத்தைக் காட்டச் சிலர் முயற்சிக்கின்றார்கள் போலும்! மேலும், இவ்வாறு நடந்துகொள்ள, ஏதோ ஒன்றுக்கு அடிமைப்பட்டுப் போனார்களோ எனவும் சிந்திக்கவேண்டி இருக்கின்றது.

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: எழுவைதீவு மக்கள் தங்கள் ஒற்றுமையை ஒன்று சேர்ந்து வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்! இதுபற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

ப: சசி, எழுவைதீவில் வாழும் இந்து - கத்தோலிக்க மக்களைக் குறித்தவிடயம் குறித்து பாராட்டவேண்டும். தாங்கள் ஒன்றாக இருக்கின்றார்கள் என்பதை ஊர் அமைப்புக்களாக, மக்களாக கையொப்பமிட்டு பல ஊடகங்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் கையளித்துள்ள அறிக்கையின் ஊடாகத் தெளிவாகத் தெரியப்படுத்தி இருக்கின்றார்கள். சந்திக்க வந்தவர்களை சண்டைக்கு வந்ததாக வர்ணிப்பது அவ்வளவு சரியில்லைத்தானே, சசி!

(அருள், யாழ்ப்பாணம்)

**கேள்வி: நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகின்றது. இனியென்ன நடக்கப் போகின்றது?**

ப: இனியென்ன அருள்? திருவிழா தான்! கொடி ஏற்றப்பட்டாயிற்று! மூலஸ் தானத்தில் முடங்கிக் கிடந்த தெய்வங்கள் வீதி உலாவுக்குப் புறப்படும் காலம்! என்ன, மக்கள் கொஞ்சம் பொறுப்புடன் செயற்பட்டால் பொதுநலன் எனப் புழுகிப் புழுகித் தம்தம் நலன்தேடும் புல்லுருவிகளைப் போகாமல் தடுக்கலாம்!

(மது, யாழ்ப்பாணம்)

**கேள்வி: இம்முறை நாடாளுமன்ற, மாகாணத் தேர்தல்களில் வடமாகாணத்தில் கனக்கக் கட்சிகளும் சுயேட்சையாகக்கனபேரும்இறங்குவார்கள் போலத் தெரிகின்றது! இப்படியே போனால் தமிழரின் நிலை என்னாகுமோ?**

ப: என்னாகும்!?... மண்ணாகும்!

(அனி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: இரகசியம் என்று சொல்லிக் கொள்கின்றார்கள்! ஆனால், சில நாள் களிலேயே அது எல்லாருக்கும் தெரிய வந்து விடுகின்றதே! அது எப்படி?**

ப: அனி, 'ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதேங்கோ!' என்று உங்களிடம் ஒருவர் வந்து சொல்கிறார் என்றால்: தமிழில் அதனுடைய அர்த்தம், அவர் எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருக்கின்றார் என்பதே! இவ் அர்த்தத்தினை அகராதியில் காணமாட்டீர்கள், அனுபவத்தில் காண்பீர்கள்!

(நிசாந், மன்னார்)

**கேள்வி: தாங்களும் செய்யமாட்டார்கள்! செய்பவர்களையும் செய்யவிட மாட்டார்கள்! தாங்கள்தான் ஒழுங்கைப் பேணுகின்றோம் எனச் சொல்லிக் கொண்டு குழப்பத்தையே மேற்கொள்கின்றார்கள்! இவர்களை என்ன செய்யலாம்?**

ப: நிசாந், நம் கண்ணில்படும் நாய்களில் பல வகையுண்டு. அவற்றில் ஒன்று 'வைக்கோல் பட்டறை நாய்கள்'! குரைத்துக் குரைத்துத் தானும் தின்னாது, தின்னுகின்ற மாடுகளையும் விடாது! குரைத்துக் குரைத்துக் குழப்புவது மட்டும்தான்அவைகளுக்குத் தெரியும்! பல வேளைகளில் குரைத்துக் கொண்டிருப்பது மட்டும்தான் தங்களின் வேலையென அவை நினைத்துக் கொண்டிருக்கின்றன! 'குரைக்கும் நாய் ஒவ்வொன்றுக்கும் கல்லெறிந்து கொண்டு நின்றால், நாம் போகவேண்டிய இடம் போய்ச்சேர முடியாது', செய்ய வேண்டியவைகளையும் செய்து முடிக்க முடியாது என்பதை நாம்தான் மனங்கொள்ள வேண்டும்!

(நிரு, மன்னார்)

**கேள்வி: நாம் பார்க்கும் இன்றைய உலகு களவுகளாலும், கொலைகளாலும், வல்லுறவுகளாலும் நிறைந்துள்ளன. உலகில் நல்லவர்கள் இருக்கின்றார்களா?**

ப: நிரு, நல்லவர்கள் நிறையவே இருக்கின்றார்கள். தீமைகள் செய்பவர்கள் தான் ஊடகங்களில் அதிக இடத்தைப் பிடித்துக் கொள்கின்றார்கள்! என்ன செய்வது!?... 'இவ்வுலகு நல்லவர்களால் நிறைந்துள்ளது. உன்னால் ஒரு நல்லவரைக் கண்டுகொள்ள முடியவில்லை என்றால்! அந்த ஒரு நல்லவராய் நீ இரு' எனப் புனித அன்னைத் திரேசா குறிப்பிடுவாள். நீங்கள் நல்லவராக இருந்தால் - நடந்தால், தீயவனொருவன் குறைந்தார் என்றும், உன்போல் பலர் உருவாகுவார்கள் என்றும் பொருள்!

(அன்ரனி, மன்னார்)

**கேள்வி: 'கொரோனா'வை நினைத்தால் குலை நடுங்குகின்றதே!?**

ப: அன்ரனி, அந்தக்குலை எந்தக்குலை என்று குறிப்பிடவிட்டால், எப்படிப் பதில் எழுதுவது! நிற்க, நான் கருதும் குலையே நீங்கள் கருதும் குலையாக இருந்தால்: கட்டிவையுங்கள் நடுங்காது!

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'அவசரகாலப் பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ,** anpuomi1970@gmail.com **என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு** sms, viber **அல்லது** whatsapp**க்கோ அனுப்பி வைக்கலாம்.**

---


# துயர் துடைப்போமா..?

பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று முன்னோர்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றோம். ஒரு வருடத்தில் முன்நூற்றி அறுபத்தி ஐந்து நாட்களிலும் வரும் புதன் கிழமைகளில் ஒரு புதன் விசேஷமான நாள் விபூதிப் புதன்.

கிறிஸ்தவர்களுக்கு அளப்பரிய பொக்கிஷமான நாள் என்றே தான் சொல்ல வேண்டும் வாழ்க்கை வாழ்வதற்காக அந்தப் புனித புதன் வருவதில்லை. எமது வாழ்க்கையைதிரும்பிப்பார்ப்பதற்காகவும் எமது உள்ளக்கிடக்கையை படம் போட்டு பார்த்து மனதை மாற்றியமைக்கும் மன மாற்றத்திற்கான ஆரம்ப நாளே என்று தான் சொல்லவேண்டும்.

மனித வாழ்வின் பாதையில் பாவம் என்ற கல்லறைக்குப் பல வழி உண்டு. தரும தேவன் கோவிலுக்கு ஒரே ஒரு வழி அந்த வழி காண ஆன்மீக வழி அமைக்க தபசுகாலம் எம்மைத் தயார்படுத்த தரப்படுகின்ற காலமாகும். தீயதை அகற்றி தீர்வு காண ஏற்படுத்தும் ஆரம்ப நாள். எமது உள்ளத் தூய்மையை ஏற்படுத்தி பாவத்தை கொல்ல வேண்டும் ஆன்மீகத்தை வெல்ல வேண்டும் அதற்கான ஆரம்ப நாள்.

நோன்பு , ஒறுத்தல்,தியாகம் பிறர் அன்பு விட்டுக்கொடுத்தல் பிறருக்காக வாழ்வது பிறருக்கு உதவி செய்தல் எம்மை வருத்தி பிறருக்கு உதவி செய்யும் உளப்பாங்கு அளந்து பார்க்க முடியாத அன்பின் ஆழத்தை அள்ளிக் கொடுத்தும் அச்சய பாத்திரமாக



உள்ளடக்கிய அன்பைப் பருகும் காலமாகும் இதை மனதில் நிறுத்திக் கொண்டு இயேசுவின் சிலுவைப் பாடுகளின் பயணத்தைத் தியானிக்க எமது வாழ்வோடு இணைத்துப் பயணிக்க அரியதொரு பொற்காலமாகும்.

இயேசுவின் சிலுவைப் பாடுகளின் வழியாகநாம்இழந்துபோனஎம்வாழ்வை மீண்டும் தேடிக் கண்டடைந்து வாழும் வாழ்வைப் புதிப்பிப்பதற்காக அனுபவிக்கும் அருமையான காலம் என்பதை மறவாது விடாதீர்கள். காலம் கடந்து போகாது கருத்தாய் வாழ்ந்து கொள்ளுங்கள் பிறருக்கு உதவி செய்வதற்கும் இந்த ஆண்டு அருமையிலும் அருமையான ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது திருச்சபை. அதுவும் தபசுகாலத்தில் மிக மிக அருமையாக ஆளப்பட வேண்டிய காலமும் நேரமுமாகவிருக்கின்றது. துயர் துடைக்கும் ஆண்டில் ஒரு நாளுக்கு ஒரு மனிதனின் துயர் துடைத்தால் 365 நாட்களில் 365 மனிதர்களின் துயரம் நீங்கிவிடும். அதற்கு முன்வர நாம் தயாரா? நீங்கள் தயாரா? மேடையேறிப் பேசுவதாலும் கையில் பேனா பிடித்து எழுதுவதாலும் அந்தத் துயரம் நீங்கிவிடாது. களத்தில் இறங்க வேண்டும். சொல்லிக்காட்டாது செயலில் இறங்கிச் செயற்பட வேண்டும்.

மண்ணுலகில் சிந்தப்படும் சிறு புன்னகை கூட விண்ணுலகில் வீண் போவதில்லை. புன்னகைக்கே இறைவன் இவ்வளவு என்றால் உதவிக்கு எவ்வளவு என்று எண்ணிச் செயற்பட வாருங்கள்.

எலிசபேத்தம்மாளின் வீடு தேடி ஒடிச் சென்று உதவி செய்த அன்னை மரியாள் போல, சிலுவை சுமந்த இயேசுவுக்கு சீமோன் செய்தது போல, அச்சம் தவிர்த்து கூட்டத்தில் களம் இறங்கிய வெரோணிக்காள் துணிந்து முகம் துடைத்து துயர் துடைத்ததுபோல மனிதர் அனைவரும் அதுவும் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் துன்புறுவோரின் நிலையறிந்து உதவி செய்ய உள்ளுணர்வோடு முன் வருவோம். உதவி செய்ய இத் தபசு காலத்தில் பிறர் துயர் துடைப்போம்.

**S.B.பீற்றர் போல்**
**யாழ்ப்பாணம்**

# யாழ் மறைமாவட்ட பங்குகளின் விசேட நிதி சேகரிப்பு -2019

| இல | பங்கு | திருப்பாலத்துவ தினம் | பரிசுத்த வாரம் | இறை அழைத்தல் தினம் | பாப்பரசர் தினம் | சுதேச குருக்கள் தினம் | மறைபரப்பு ஞாயிறு தினம் | நல்லாயன் தினம் | கிறிஸ்மஸ் தினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **யாழ்ப்பாண மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பேராலயம் | 32,500.00 | 80,500.00 | 27,500.00 | 18,300.00 | 41,000.00 | 232,530.00 | 30,200.00 | 72,000.00 |
| 2. | குருநகர் | 11,000.00 | 30,000.00 | 20,500.00 | 14,440.00 | 67,860.00 | 65,000.00 | 50,000.00 | 23,000.00 |
| 3. | அடைக்கல அன்னை ஆலயம் | 4,050.00 | 43,780.00 | 4,350.00 | 3,700.00 | 3,250.00 | 34,600.00 | 100,500.00 | 12,250.00 |
| 4. | பாஷையூர் | 10,500.00 | 46,000.00 | 9,500.00 | 9,000.00 | 11,000.00 | 25,110.00 | 27,640.00 | 22,500.00 |
| 5. | நாவாந்துறை | 8,210.00 | 47,830.00 | 13,130.00 | 8,300.00 | 37,230.00 | 126,600.00 | 13,100.00 | 21,500.00 |
| 6. | பண்டியன்தாழ்வு | 12,500.00 | 21,000.00 | 11,000.00 | 5,500.00 | 11,400.00 | 21,400.00 | 12,000.00 | 15,000.00 |
| 7. | கொழும்புத்துறை | 4,690.00 | 18,000.00 | 10,000.00 | 4,660.00 | 7,710.00 | 15,670.00 | 10,850.00 | 6,820.00 |
| 8. | கொய்யாத்தோட்டம் | 7,050.00 | 6,500.00 | - | 2,255.00 | 5,065.00 | 5,500.00 | 30,000.00 | 6,530.00 |
| 9. | திருநெல்வேலி | 10,000.00 | 9,722.00 | 6,330.00 | 2,580.00 | 5,470.00 | 7,580.00 | 4,681.00 | 13,530.00 |
| 10. | கோப்பாய் | 6,000.00 | 36,000.00 | 5,000.00 | 5,000.00 | 7,000.00 | 10,000.00 | 10,000.00 | 16,650.00 |
| 11. | சுண்டிக்குளி | 10,890.00 | 18,100.00 | 20,250.00 | 7,230.00 | 11,550.00 | 13,000.00 | 15,000.00 | 10,150.00 |
| 12. | நல்லூர் | 5,100.00 | 8,500.00 | 2,400.00 | 3,600.00 | 4,500.00 | 18,000.00 | 20,000.00 | 5,500.00 |
| 13. | மணியந்தோட்டம் | 12,000.00 | 46,000.00 | 12,000.00 | 12,000.00 | 16,000.00 | 12,000.00 | 11,500.00 | 25,000.00 |
| 14. | திரேசாள் ஆலயம்-றக்கா வீதி | 6,152.00 | 13,967.00 | 3,451.00 | 3,300.00 | 5,917.00 | 9,000.00 | 4,850.00 | 3,000.00 |
| | **தீவக மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | மண்டைதீவு | 10,000.00 | 13,500.00 | 6,500.00 | 5,050.00 | 6,500.00 | 10,200.00 | 13,200.00 | 12,200.00 |
| 2. | கரம்பன் | 3,000.00 | 5,000.00 | 3,000.00 | 5,050.00 | 3,950.00 | 7,000.00 | 10,000.00 | 5,000.00 |
| 3. | நாரந்தனை | 2,800.00 | 5,640.00 | 5,250.00 | 2,600.00 | - | 10,000.00 | 10,000.00 | 15,000.00 |
| 4. | ஊர்காவற்துறை | 10,700.00 | 18,850.00 | 3,000.00 | - | 6,000.00 | 46,650.00 | 18,080.00 | 12,000.00 |
| 5. | நெடுந்தீவு | 3,000.00 | 17,000.00 | 2,000.00 | 2,850.00 | 7,650.00 | 8,000.00 | 11,120.00 | 5,000.00 |
| 6. | சாட்டி - மண்கும்பான் | 6,800.00 | 8,500.00 | 6,000.00 | 6,000.00 | 5,500.00 | 7,750.00 | 7,000.00 | 10,000.00 |
| 7. | புங்குடுதீவு | 3,000.00 | 3,000.00 | 3,500.00 | 3,200.00 | 3,100.00 | 3,200.00 | 3,500.00 | 4,000.00 |
| | **இளவாலை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | இளவாலை | 13,200.00 | 32,140.00 | 18,528.00 | 5,600.00 | 13,150.00 | 29,000.00 | 26,140.00 | 27,000.00 |
| 2. | மாதகல் | 7,150.00 | 21,450.00 | 6,320.00 | - | 5,300.00 | 42,000.00 | 20,000.00 | 16,500.00 |
| 3. | சில்லாலை | 15,000.00 | 40,000.00 | 10,000.00 | 10,000.00 | 12,000.00 | 20,000.00 | 23,000.00 | 22,000.00 |
| 4. | பண்டத்தரிப்பு | 2,100.00 | 4,500.00 | 3,100.00 | 2,100.00 | 22,000.00 | 6,500.00 | 13,000.00 | 7,100.00 |
| 5. | விளான் | 5,320.00 | 20,280.00 | 4,250.00 | 5,220.00 | 5,160.00 | 6,190.00 | 6,150.00 | 12,740.00 |
| 6. | மானிப்பாய் | 22,040.00 | 51,850.00 | 20,060.00 | 12,000.00 | 20,300.00 | 43,450.00 | 17,500.00 | 27,835.00 |
| 7. | மாரீசன்கூடல் | 2,400.00 | 13,700.00 | 1,450.00 | 3,020.00 | 2,240.00 | 11,130.00 | 2,500.00 | 3,730.00 |
| 8. | உரும்பிராய் | 13,000.00 | 15,000.00 | 8,000.00 | 7,700.00 | 13,500.00 | 16,000.00 | 50,500.00 | 10,000.00 |
| 9. | ஆனைக்கோட்டை | 13,800.00 | 59,295.00 | 16,460.00 | 6,486.00 | 10,232.00 | 20,470.00 | 22,245.00 | 30,050.00 |
| 10. | குளமங்கால் | 4,600.00 | 16,000.00 | 5,400.00 | 3,150.00 | 6,300.00 | 72,140.00 | 9,200.00 | 4,000.00 |
| 11. | மல்வம் | 2,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 17,000.00 | 3,000.00 |
| 12. | வலித்தூண்டல் | 1,050.00 | 4,670.00 | - | 1,230.00 | 1,010.00 | 1,730.00 | 1,350.00 | 1,500.00 |
| 13. | சுன்னாகம் | 16,956.00 | 39,200.00 | 12,700.00 | 6,947.00 | 12,912.00 | 12,120.00 | 20,781.00 | 58,385.00 |
| | **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பருத்தித்துறை | 18,000.00 | 38,000.00 | 6,000.00 | 6,000.00 | 15,000.00 | 55,500.00 | 35,000.00 | 18,600.00 |
| 2. | தாளையடி | 5,530.00 | 13,630.00 | 1,800.00 | 1,750.00 | 7,200.00 | 6,130.00 | 3,830.00 | 4,200.00 |
| 3. | அச்சுவேலி | 5,800.00 | 11,000.00 | 4,000.00 | 5,200.00 | 4,500.00 | 6,000.00 | 6,000.00 | 7,200.00 |
| 4. | கரவெட்டி | 13,750.00 | 25,200.00 | 24,200.00 | 4,200.00 | 19,150.00 | 20,200.00 | 20,700.00 | 15,300.00 |
| 5. | மிருசுவில் | 6,510.00 | 14,000.00 | 5,000.00 | 4,200.00 | 10,000.00 | 10,150.00 | 8,550.00 | 8,000.00 |
| 6. | சாவகச்சேரி | 17,000.00 | 32,800.00 | 20,000.00 | 12,000.00 | 18,600.00 | 100,000.00 | 25,000.00 | 23,000.00 |
| 7. | மணற்காடு | 4,250.00 | 3,000.00 | 4,900.00 | 3,000.00 | 3,500.00 | 10,000.00 | 10,000.00 | 3,500.00 |
| 8. | சக்கோட்டை | 19,440.00 | 24,000.00 | 5,000.00 | 3,500.00 | 19,000.00 | 35,570.00 | 35,315.00 | 10,000.00 |
| 9. | பளை, முகமாலை | 3,700.00 | 12,370.00 | 5,590.00 | 4,170.00 | - | 7,370.00 | 7,660.00 | 4,520.00 |
| 10. | கடடைக்காடு | 1,500.00 | 7,000.00 | 2,500.00 | 3,040.00 | 7,450.00 | 82,140.00 | 9,900.00 | 7,770.00 |
| 11. | ஊறணி | - | - | - | - | - | 7,500.00 | - | - |
| | **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | கிளிநொச்சி | 7,700.00 | 35,378.00 | 18,548.00 | 12,126.00 | 11,000.00 | 14,520.00 | 14,600.00 | 39,600.00 |
| 2. | வலைப்பாடு | 16,640.00 | 26,000.00 | 4,620.00 | 8,350.00 | 4,400.00 | 17,500.00 | 13,600.00 | 16,700.00 |
| 3. | உருத்திரபுரம் | 19,500.00 | 40,000.00 | 8,000.00 | 4,600.00 | 6,000.00 | 8,000.00 | 14,000.00 | 7,000.00 |
| 4. | வட்டக்கச்சி | 3,770.00 | 10,450.00 | 3,350.00 | 1,540.00 | 5,400.00 | 5,740.00 | 22,220.00 | 12,010.00 |
| 5. | அக்கராயன் | 2,337.00 | 4,000.00 | 4,000.00 | 3,630.00 | 4,300.00 | 4,900.00 | 2,140.00 | 4,000.00 |
| 6. | மல்லாவி | 1,000.00 | 10,250.00 | 2,000.00 | 1,500.00 | 2,700.00 | 5,500.00 | 5,000.00 | 2,000.00 |
| 7. | முழங்காவில் | 4,000.00 | 5,500.00 | 4,000.00 | 3,000.00 | 3,500.00 | - | 18,050.00 | - |
| 8. | குமுழமுனை | 2,000.00 | 3,500.00 | 2,000.00 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 2,500.00 | 4,000.00 |
| 9. | பூநகரி | 3,460.00 | 4,400.00 | 3,100.00 | 2,400.00 | 3,200.00 | 5,030.00 | 3,250.00 | 3,800.00 |
| 10. | பரந்தன் | 3,400.00 | 5,700.00 | 4,000.00 | 3,600.00 | 3,500.00 | 1,510.00 | 6,550.00 | 6,292.00 |
| | **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | முல்லைத்தீவு | 9,000.00 | 25,000.00 | 12,000.00 | 5,500.00 | 12,000.00 | 18,500.00 | 27,000.00 | 17,000.00 |
| 2. | புதுக்குடியிருப்பு | 7,000.00 | 12,000.00 | 4,500.00 | 4,800.00 | 7,000.00 | 10,000.00 | 14,500.00 | 11,000.00 |
| 3. | மாங்குளம் | 650.00 | 2,500.00 | 1,000.00 | 1,000.00 | 1,600.00 | 1,500.00 | 2,000.00 | 1,500.00 |
| 4. | இரணைப்பாலை | 6,450.00 | 25,800.00 | 3,375.00 | 3,150.00 | 3,475.00 | 12,200.00 | 17,500.00 | 10,200.00 |
| 5. | அளம்பில் | 2,800.00 | 4,800.00 | 2,500.00 | 2,000.00 | 1,800.00 | 1,800.00 | 4,000.00 | 4,500.00 |
| 6. | கூழாமுறிப்பு | 4,250.00 | 10,000.00 | 5,000.00 | 3,000.00 | 4,300.00 | 5,000.00 | 5,000.00 | 6,600.00 |
| 7. | கொக்கிளாய் | 2,500.00 | 2,700.00 | 3,000.00 | 3,500.00 | 2,250.00 | 3,000.00 | 2,500.00 | 2,000.00 |
| 8. | உடையார்கட்டு | 2,300.00 | 4,200.00 | 2,100.00 | 2,350.00 | 2,050.00 | 3,860.00 | 2,420.00 | 3,430.00 |
| 9. | தர்மபுரம் | 2,100.00 | 6,500.00 | 1,600.00 | 1,500.00 | 2,000.00 | 2,100.00 | 5,500.00 | 2,100.00 |
| 10. | உடுப்புக்குளம் | 2,000.00 | 5,000.00 | 3,000.00 | 2,000.00 | 2,000.00 | 10,000.00 | 3,000.00 | - |
| 11. | சிலாவத்தை | - | 15,340.00 | - | - | 5,600.00 | - | - | 3,100.00 |

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

அருட்பணி.செ.நேசநாயகம்
நிதிமுகாமையாளர்,

## நல்லாயன் நிதியம் - 2019
### பங்குகளில் சேர்க்கப்பட்ட நிதி விபரம்

| இல. | பங்கு | தொகை |
|---|---|---|
| | **யாழ்ப்பாண மறைக்கோட்டம்** | |
| 1 | பேராலயம் | 30,200.00 |
| 2 | குருநகர் | 50,000.00 |
| 3 | அடைக்கல அன்னை ஆலயம் | 100,500.00 |
| 4 | பாசையூர் | 27,640.00 |
| 5 | நாவாந்துறை | 13,100.00 |
| 6 | பண்டியன்தாழ்வு | 12,000.00 |
| 7 | கொழும்புத்துறை | 10,850.00 |
| 8 | கொய்யாத்தோட்டம் | 30,000.00 |
| 9 | திருநெல்வேலி | 4,681.00 |
| 10 | கோப்பாய் | 10,000.00 |
| 11 | சுண்டிக்குளி | 15,000.00 |
| 12 | நல்லூர் | 20,000.00 |
| 13 | மணியந்தோட்டம் | 11,500.00 |
| 14 | திரேசாள் ஆலயம் - நக்கா வீதி | 4,850.00 |
| | **தீவக மறைக்கோட்டம்** | |
| 1 | மண்டைதீவு- அல்லைப்பிட்டி | 13,200.00 |
| 2 | கரம்பன் | 10,000.00 |
| 3 | நாரந்தனை | 10,000.00 |
| 4 | ஊர்காவற்துறை | 18,080.00 |
| 5 | நெடுந்தீவு | 11,120.00 |
| 6 | சாட்டி - மண்கும்பான் | 7,000.00 |
| 7 | புங்குடுதீவு | 3,500.00 |
| | **இளவாலை மறைக்கோட்டம்** | |
| 1 | இளவாலை | 26,140.00 |
| 2 | மாதகல் | 20,000.00 |
| 3 | சில்லாலை | 23,000.00 |
| 4 | பண்டத்தரிப்பு | 13,000.00 |
| 5 | விளான் | 6,150.00 |
| 6 | மானிப்பாய் | 17,500.00 |
| 7 | மாரீசன்கூடல் | 2,500.00 |
| 8 | உரும்பிராய் | 50,500.00 |
| 9 | ஆனைக்கோட்டை | 22,245.00 |
| 10 | குளமங்கால் | 9,200.00 |
| 11 | மல்வம் | 17,000.00 |
| 12 | வலித்தூண்டல் | 1,350.00 |
| 13 | சுன்னாகம் | 20,781.00 |
| | **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | |
| 1 | பருத்தித்துறை | 35,000.00 |
| 2 | தாளையடி | 3,830.00 |
| 3 | அச்சுவேலி | 6,000.00 |
| 4 | கரவெட்டி | 20,700.00 |
| 5 | மிருசுவில் | 8,550.00 |
| 6 | சாவகச்சேரி | 25,000.00 |
| 7 | மணற்காடு | 10,000.00 |
| 8 | சக்கோட்டை | 35,315.00 |
| 9 | பளை, முகமாலை | 7,660.00 |
| 10 | கட்டைக்காடு | 9,900.00 |
| 11 | ஊறணி | - |
| | **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | |
| 1 | கிளிநொச்சி | 14,600.00 |
| 2 | வலைப்பாடு | 13,600.00 |
| 3 | உருத்திரபுரம் | 14,000.00 |
| 4 | வட்டக்கச்சி | 22,220.00 |
| 5 | அக்கராயன் | 2,140.00 |
| 6 | மல்லாவி | 5,000.00 |
| 7 | முழங்காவில் | 18,050.00 |
| 8 | குமுழமுனை | 2,500.00 |
| 9 | பூநகரி | 3,250.00 |
| 10 | பரந்தன் | 6,550.00 |
| | **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | |
| 1 | முல்லைத்தீவு | 27,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு | 14,500.00 |
| 3 | மாங்குளம் | 2,000.00 |
| 4 | இரணைப்பாலை | 17,500.00 |
| 5 | அளம்பில் | 4,000.00 |
| 6 | கூழாமுறிப்பு | 5,000.00 |
| 7 | கொக்கிளாய் | 2,500.00 |
| 8 | உடையார்கட்டு | 2,420.00 |
| 9 | தர்மபுரம் | 5,500.00 |
| 10 | உடுப்புக்குளம் | 3,000.00 |
| 11 | சிலாவத்தை | - |
| | | **989,872.00** |

**அருட்பணி.செ.நேசநாயகம்**
**நிதிமுகாமையாளர்,**
**ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**



# பாடுகளின் சிலுவைப் பாதை..



**சிலுவைப் பாதையை புனித பிரான்சிஸ் அசிசியார் முதன் முதலில் அமைத்துக்கொடுத்து, ஆழ்ந்த இறை அனுபவத்தை அடையச் செய்தார். நாம் சுமார் 15 நிமிடங்களில் முழுப்பலனைப்பெற கோவிலிலோ, வீட்டிலோ, நேரம் கிடைக்கும்போதோ சிலுவைப்பாதை செய்வது நல்லது. இந்தத் தவக்காலத்தில் ஞாயிறு தவிர மற்ற எல்லா நாட்களிலும் செய்ய ஆசையோடு கேட்டுக் நிற்கிறோம்.**

**தொடக்கச் செபம்:**
இயேசுவே! உத்தரிக்கும் ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கும், நமக்கும் சிலுவைப்பாதை வழியாக தேவரீருடைய இரக்கத்தைப் பெறவும், சுகிர்த பலனை அடையவும் செபிக்கிறோம். அர்ச்சிஷ்ட வியாகுல மாதாவே, எமக்குத் துணையாய் வாரும்.

**1–வது ஸ்தலம்**

**மு:** திவ்விய இயேசுவே, உம்மை ஆராதித்து வணாங்கி, உமக்கு நன்றி அறிந்த ஸ்தோத்திரம் செய்கிறோம்.
**து:** அதேதெனில் உம்முடைய பார அர்ச்சிஸ்டசிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.
“ஒரு குற்றமும் இல்லையே” என்று கூறிய பிலாத்து, குருக்களும் மூப்பர்களும் தூண்டிவிட்ட மக்களும் சிலுவையில் அறைய வேண்டுமென்று அடம் பிடிக்கவே, தான் தப்பித்துக் கொள்ள இயேசுவைச் சிலுவையில் அறையத் தீர்ப்பிட்டான். இயேசுவே, உம்மை ஆராதிக்கிறோம்
*(எல்லோரும் தலை வணங்குதல்)*
இயேசுவே, முறையிடாமல் சாந்தமாயிருந்தவரே, எங்களுக்கு வரும் துன்பங்களை பணிந்த மனதோடு ஏற்றுக்கொள்ளக் கற்பியும்.
எங்கள் பேரில் தயவாயிரும்...

**2–வது ஸ்தலம்**

**மு:** இயேசு சிலுவையை அணைத்துக் கொள்ளவே கல்வாரிப் பயணம் தொடங்கியது



*இயேசுவே உம்மை ஆராதிக்கிறோம்!*
இறை இயேசுவே துன்ப துயரங்கள் ஏற்படும்போது நீர் எங்களோடு, எங்கள் உள்ளத்தில் இருக்கிறீர் என்று உணராது உம்மை அணைத்துக் கொள்ள தவறிவிட்டோம் மன்னியும் சுவாமி ( எங்கள் பேரில்..)

**3–வது ஸ்தலம்**

**மு:** பாரமான மரச் சிலுவையின் அழுத்தத்தைத் தாங்கமுடியாது முதல் முறை கீழே விழுகிறார்.
*இயேசுவே உம்மை ஆராதிக்கிறோம்!*
இயேசுவே மனச்சுமை, பாவச்சுமை அழுத்தத்தால் வீழ்ந்து கிடக்கும் நாங்கள் உமது அருள் வரங்களைப் பெற்று புத்துணர்ச்சியோடு எழவும், மேலும் சாவான பாவத்தில் ஒருபோதும் விழாதிருக்கவும் தயை செய்தருளும் சுவாமி
எங்கள் பேரில் தயவாயிரும்...

**4–வது ஸ்தலம்**

பிலாத்து விதித்த தீர்ப்பைக் கேட்டு ஓடோடி வந்த அன்னை மகனின் கோலத்தைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறி அழுதார். தன் பார்வையால் மகனுக்கு ஊக்கம் கொடுத்தார். மாதாவே உம்மை வணங்குகிறோம்!
எங்கள் பேரில் தயவாயிரும்...

**5–வது ஸ்தலம்**

ஓ இயேசுவே ஒருவரின் பா வையில் பிறரைச் சுட்டெரிக்கலாம் அல்லது சுடர் ஒளி ஆக்கலாம். நாமும் கனிவான பார்வையால் மற்றவரை திடப்படுத்தி வாழ வைப்போம். எங்கள் பேரில்...)

**5–வது ஸ்தலம்**

சீடர்கள் ஓடிவிட்டனர். புனித இராயப்பர் கூட மும்முறை மறுதலித்து மாயமாய் மறைந்து விட்டார். இந் நிலையில் அவ்வழி வந்த சீரேன் ஊரானாகிய சீமோனை இயேசுவின் சிலு-வையைச் சுமக்க வைத்தனர்.
*இயேசுவே உம்மை ஆரா திக்கிறோம்!*
பிறர் துயருறும்போது கைமாறு கருதாமல் உதவி செய்தால் எமக்கே உதவுகிறோம் என்பதை உணரா-மல் விட்டுவிட்டோம். இனி பிறர் நலம் புரிந்து சீமோனாக வாழ எமக்கு அருள்புரியும் சுவாமி.

**6–வது ஸ்தலம்**

வீரப்பெண்வெரோணிக்கா துணிவோடு சென்று, துணி ஒன்றால் கறைபடிந்த இயேசுவின் திருமுகத்தைத் துடைத்தாள். சிறிது ஒளி பெற்றதோடு துணிவும் அடைந்தார் இயேசு. என்ன ஆச்சரியம்! அவரது திருமுகச்சாயலே அத்துணியில் பரிசாகக் கிடைத்தது.
*இயேசுவே உம்மை ஆராதிகிறோம்!*
இயேசுவே, துயருறுவோரைக் கண்டால் அவர்தம் துயர் துடைத்து, உமது திருமுகச்சாயலை எங்கள் உள்ளங்களில் பதித்துக்கொள்ள வரம் அருளும் சுவாமி. எங்கள் பேரில்...)

**7–வது ஸ்தலம்**

பாரமான சிலுவையைச் சுமந்து சென்ற இயேசு தடுமாறி இரண்டாம் முறை விழுந்தார்.
இனிய இயேசுவே உம்மை ஆராதிக்கிறோம்!
இறை இயேசுவே, துயருறுவோரைக் கண்டால் அவர் தம் துயர் துடைத்து, உமது திருமுகச் சாயலை எங்கள் உள்ளங்களில் பதிந்து கொள்ள வரம் அருளும் சுவாமி. எங்கள் பேரில்...)

**8 வது ஸ்தலம்**

எருசலேம் பெண்கள் இயேசுவைப் பார்த்து கதறி அழுது புலம்பி, ஆறுதல் கூற வந்தார்கள். ஆனால் இயேசுவோ அவர்களுக்கு அறி-வுரை வழங்கி, ஆறுதல் கூறினார். இயேசுவே, உம்மை ஆராதிக்கிறோம்!
இயேசுவே, துன்பப்படும் பெண்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்கள் பிள்ளைகள் கல்வியில், கலைகளில் தேர்ச்சி பெறச்செய்து உமக்கு உகந்தவர்களாக வாழ எங்களுக்கு ஆற்றல் அளிக்க வேண்டுகிறோம். (எங்கள் பேரில்...)

**9 வது ஸ்தலம்**

பாரமான சிலுவை தோள் தசையைக் கிழித்து எலும்புகள் வெளியே தெரிய, கொடிய வேதனையினால் இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.
இயேசுவே உம்மை ஆராதிக்கிறோம்.
இயேசுவே, நீர் விதைத்த இறையரசை நாங்கள் முழுமையாக உணரவும், எம் அயலார்களை உணர வைக்கவும் உமது அருளைத் தாரும் சுவாமி. எங்கள் பேரில்...)

**10 வது ஸ்தலம்**

ஆதாம்-ஏவாள் பாவமின்றி இருந்தபோது ஆடையைப் பற்றிக் கவலைப் படவில்லை. பாவம் நுழைந்த போதுதான் இலை தழைகளை உடுத்தி, உடலை மறைத்துக் கூனிக் குறுகி நின்றனர். ஆன்மா மறைக்க வேண்டியதல்ல, ஆனால் தூய்மையாக்கப்படவேண்டியது. ஆன்மாவைத் தூய்மையாக்கி மீட்க வந்த இயேசுவே, உம்மை ஆராதிக்கிறோம்.
இயேசுவே, அவமானப்பட்டு நிற்கும் அன்பர்களுக்கு மானத்தோடு வாழ வைக்க பரந்த மனதைத் தாரும். எங்கள் பேரில்...)

**11–வது ஸ்தலம்**

இயேசு சிலுவையில் அறையப்படுகிறார் .
*இயேசுவே உம்மை ஆராதிக்கிறோம்!*
இயேசுவே, சிலுவை குறுக்கு நெடுக்கு சட்டங்களால் ஆனது. இது இப்போது புனிதம் அடைந்துள்ளது. சிலுவை நம்மைப் புனிதமாக்கும் கருவியாகும். இதுபோல் இறையன்பும், பிறரன்பும் ஒன்றாக இணைக் கப்பட்டுள்ளது ஓர் அரிய கட்டளைச் செயல். இதை ‘சிக்’கெனப் பிடித்து நிலை வாழ்வை அடைவோம்.

**12–வது ஸ்தலம்**

இயேசு சிலுவையில் விண்ணுக்கும்- மண்ணுக்கும் இடையில் மூன்று மணிநேரம் தொங்கிக் கொண்டே நற்செய்தியில் நிறை உரையாக. கருத்தாக சில செய்திகளை வழங்கினார். அவை: 1. ‘தந்தையே இவர்களை மன்னியும்’ 2. ‘இன்றே நீ என்னோடு பரகதியில் இருப்பாய்’. 3. ‘இதோ உன் தாய்’ என்று அவர் தாயை நம் தாயாக்கினார். 4. ‘தாகமாய் இருக்கிறது’. 5. ‘என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?’ 6. ‘எல்லாம் நிறைவேறிற்று. 7. தந்தையின் கை-யில் ஆவியை ஒப்படைத்தார்.
இயேசுவே உம்மை ஆராதிக்கிறோம்
இயேசுவே, இந்த நற்செய்தியின்படி வாழ்ந்து எம்மில் இறையாட்சியை மலரச் செய்யும் சுவாமி (எங்கள் பேரில்...)

**13 வது ஸ்தலம்**

இயேசு சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு, அவரது திருச்சடலம் அண்னையின் மடிமீது கிடத்தப்படுகிறது. அன்னை அழுதாலும், இறைச் சித்தத்தை நிறைவேற்றி விட்டோம் என்று நிம்மதி கொண்டார்.
எம் வியாகுல அன்னையே. எம்மையும் உம் கரங்களில் ஏற்றுக் கொண்டு எம் பாவங்களுக்காக முழுமையான மனஸ்தாபத்தைப் பெற்றுத் தாரும். எங்கள் பேரில்...)

**14 வது ஸ்தலம்**

இயேசுவின் உடல் சூசை. நிக்கோதேமு பக்தர்களால் அடக்கம் செய்யப் படுகிறது. இயேசுவே உம்மை ஆரா திக்கிறோம். இயேசுவே, திவ்விய நற் கருணை வழியாக உம்மை என் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும்போது. உமது ஆராதனைக்குரிய திருவுடல் தங்குவதற்கேற்ற இல்லிடமாக மாற்றியருளும் சுவாமி (எங்கள் பேரில்...)

**நிறைவுரை:** சிலுவைப்பாதை இயேசுவின் அடக்கத்தோடு முடியவில்லை. மரித்த மூன்றாம் நாளில் சிறை வைத்த கல்லறைக் கல் சிதறி ஓடுகிறது. இயேசு சாவை வென்று உயிர்த்து விட்டார். நாமும் ஒரு நாள் உயிர்ப்போம், அங்கே நாம் நிறை வாழ்வை அடைவோம்.

## நீங்கா நினைவில் 6ம் ஆண்டு

மண்ணில் 23 11 1935



விண்ணில் 15 03 2014

அமரர்

**அருளானந்தம் திரேசம்மா**

**அம்மா உங்களை அன்போடு நினைக்கின்றோம்**

நெஞ்சினிலே நிலையாக நின்று
நினைவுகளில் மகிழ்வைத் தந்து
இறைவனிடம் அமைதியாகத் தூங்கும்
எமது அன்புத் தாயின் ஆறாம் ஆண்டு
நினைவிற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் மறைந்து ஆறாண்டு ஆனாலும்
உங்களை நினைத்து நெஞ்சம் அழுகின்றது,
ஆறாண்டென்ன ஆண்டுகள் பல ஆனாலும்
மறவோம் நாம் உம் அன்பு முகம்.

இறைவா, நீர் தந்த எம் அன்பு அன்னைக்காய்
நன்றிக்கரம் குவிக்கின்றோம்.
அவரை உம் திருப்பாதம் சேர்த்து மகிழச் செய்யும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 16.03.2020 திங்கட்கிழமை யாழ். திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் காலை 5.50 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

36/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

AD 22

## நன்றி நவில்கின்றோம்

03.02.2020 அன்று இறைபதம் அடைந்த சவரிமுத்து ஆரோக்கியநாதர் (முழுநேர மறையாசிரியர்) அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு செபித்து இறுதி ஆசீர் வழங்கிய யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய பேரருட்.திரு. ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களிற்கும் இரங்கற் திருப்பலியை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்த யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் *P.J.* ஜெபரட்ணம் அடிகளாருக்கும், அவரோடு இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட்பணியாளர்கள் மற்றும் அவர்களோடு இணைந்து செபித்த அருட்பணியாளர்கள், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் விக்ரர்சோசை அடிகளார் அவர்களுக்கும், அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும், பணியாளர்களும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரிற்கும் எமது இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி மேரி கலிஸ்ரா ஆரோக்கியநாதர்
(றஞ்சி)
குடும்பத்தினர்

இல 76, புலோலி மேற்கு
புலோலி

AD/16

## விண்ணக வாழ்வில் 31ம் நாள் நினைவு

பிறப்பு 1939 08 28



இறப்பு 2020 02 09

அமரர்

**சவரிமுத்து யோசவ் தேவதாசன்**

*உன்னதரான கடவுளை நோக்கி*
*எனக்காக யாவையும் செய்து முடிக்கும்*
*இறைவனை நோக்கியே, நான் மன்றாடினேன்*
*வானகத்தினின்று அவர் எனக்கு*
*உதவி அனுப்பி என்னைக் காத்தருள்வார்.*
*கடவுள் தம் பேரன்பையும் வாக்குப்*
*பிறழாமையையும் வெளிப்படுத்துவார்*

(திருப்பாடல் 57 : 2,3)

நோய் நொடிகள் ஆட்கொண்ட வேளையில், தாங்கிட
திடமனம் அளித்து, உம் நேரம், இறுதி நேரத்தில்
மகிமைமிக்க பேரமைதியை கொடுத்த இறைவா, நன்றி.
அப்பாவின் ஆழ்ந்த விசுவாசத்தை முன்னிட்டு அவர்
உமது இல்லத்திலும் இன்புற்று இருப்பாராக.
அப்பாவிற்காக செபிப்போம்.

16/14 விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

**பிள்ளைகள்.**

AD 18

## விண்ணக வாழ்வில் 31ம் நாள் நினைவு

தோற்றம் 1939 08 28



மறைவு 2020 02 09

அமரர்

**சவரிமுத்து யோசவ் தேவதாசன்**

**உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்**

(யோவான் 11 : 25)

பேரன்பும் பரிவிரக்கமும் நிறைந்த ஆண்டவரே! நீர் உம்மிடம் அழைத்துக் கொண்ட அமரர் **சவரிமுத்து யோசவ் தேவதாசன்** எனும் உம் அடியாருக்கு நீர் கொடுத்த நீண்ட வாழ்வு எனும் கொடைக்காக நன்றி கூறுகின்றோம். இவர் மனித பலவீனத்தால் செய்து கொண்ட அனைத்து பாவங்களையும் குறைகளையும் மன்னித்து நிலை வாழ்வையும் புனிதர்களுடைய தோழமையுள்ள உறவையும் கொடுத்தருள வேண்டும் என்று உம்மை இரந்து மன்றாடுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக **10.03.2020** செவ்வாய் காலை **11.00** மணிக்கு பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

**16/14 விதானையார் வீதி,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

AD 17

## திருத்தந்தையின் தவக்கால.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் மீண்டும் எமக்கு அளிக்கின்றார் என்பதை உணராது நாம் கடந்து போகலாகாது. இப்புதிய வாய்ப்பு நம்மில் ஒரு நன்றியுணர்வை எழுப்ப வேண்டும்.

**4. தமக்கென சேர்த்து வைக்காமல் எல்லோரோடும் பகிர்ந்து கொள்ள வேண்டியதே செல்வம்.**

பாஸ்கா மறைபொருள் நம் வாழ்வின் மையம் என்பது எம்முடன் வாழும் போரினால் பாதிக்கப்பட்டோர், கருவில் இருப்போர் முதல் முதியோர் வரை வாழ்வில் பல்வேறு துன்பங்களைச் சுமந்து வாழ்வோர் மற்றும் பல்வேறு வன்முறைகளுக்கு உட்படுவோரில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் காயங்கள் உணர்த்தும் இரக்கத்தை உணர்தலாகும்.

நல் எண்ணம் கொண்ட ஆண்களும், பெண்களும் தமக்குரியவற்றை இல்லாதவர்களுடன் பகிர்வதன் மூலம் ஓர் நல் உலகைக் கட்டியெழுப்ப வேண்டும். நம்மை ஏழை எளியவர்களுடன் அடையாளப்படுத்த வேண்டும். ஈகை செய்வது மனிதனை அதீத நிலைக்கு உயர்த்துகின்றது. அதேவேளை சுயநலத்துடன் பொருட்களைப் பாதுகாத்தல் தமக்கென வைத்துப் பேணுவது மனிதனை தாழ் நிலைக்குக் கொணர்கின்றது. சுயநல வாழ்வு எம்மைச் சிறைப்படுத்துகின்றது. ஆகவே தவக்கால நிகழ்வுகள் எங்கள் இதயங்களைத் திறக்கவும் ஆண்டவரின் அழைப்பை நாம் கேட்பதன் வழியாக உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் நாம் திகழ மரியன்னையிடம் வேண்டுவோம் என திருத்தந்தையின் தவக்காலச் செய்தி அமைந்துள்ளது.

## நீங்கா நினைவில் 1ம் ஆண்டு

மண்ணில் 24 10 1966



விண்ணில் 09 03 2019

அமரர்

**யோசவ் அன்ரன் லியோ அன்ரசன்**

ஓராண்டு ஆனதேயப்பா! எமைப் பிரிந்து நீர் சென்று
ஒரு நாளும் உமைநினையா தருணங்கள் எமக்கில்லையப்பா

பதுவைப் புனிதரின் பரிந்துரையை நிதமும் நாடிடும்
உம் விசுவாசமும் பிறர் மகிழ நீர் கூறிடும் விகட கதைகளும்
பலரிடமும் நட்புப் பாராட்டும் நல்லிதயமும்
இடர்படினும் உதவிகள் புரிய விரைந்திடும் உம் நற்பண்பும்
நீர் எம்மோடு கூட இருப்பதாக உருவகிக்கின்றன அப்பா

காருண்ய தேவனே!
உம் அமைதியில் இளைப்பாற – உம்மிடம்
அழைத்த எம் அப்பாவை அணைத்துக் கொள்வீரே.
துயருறுவோரின் ஆறுதலே!
துயருறுவோருக்கு அமைதியையும்,
மகிழ்வையும் அளித்தருளும் தந்தையே!

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 10.03.2020 செவ்வாய்க்கிழமை மாதகல் புனித. அந்தோனியார் ஆலயத்தில் மாலை 4.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

நல்லாயன் வீதி,
சில்லாலை.

AD 21

## விண்ணக வாழ்வின்

| 32ம் வருடம் | 9ம் வருடம் | 40ம் வருடம் |
|---|---|---|
|  |  |  |
| அமரர் யோண் சந்தியாப்பிள்ளை | அமரர் சந்தியாப்பிள்ளை யூட் ஆனந்தராஜ் | அமரர் சந்தியாப்பிள்ளை அந்தோனியாராணி |
| மண்ணில் : 25.07.1916 | மண்ணில் : 08.08.1966 | மண்ணில் : 12.10.1920 |
| விண்ணில் : 28.11.1988 | விண்ணில் : 16.02.2011 | விண்ணில் : 12.03.1980 |

" உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்.
அவர்கள் எந்நாளும் உம்மைப் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள் "

புனித சூசையப்பர்
கோவில் ஒழுங்கை
அளவெட்டி.

பிரிவால் துயருறும்
சந்தியாப்பிள்ளை
குடும்பத்தினர்.

AD 19

## 3ம் ஆண்டு நினைவு நாள்

28.02.2017



அமரர்

**யோசவ் அலோசியஸ் நவரட்ணம்**

இவ்வுலக வாழ்வில் இறைவன் இவருக்களித்த எல்லா நன்மைகளுக்கும் எண்ணிலடங்கா நன்றி கூறுகின்றோம். எம்மை விட்டுப் பிரிந்தாலும், மறு வாழ்வில் அன்பு, இரக்கம் மன்னிப்பை நிறைவாக வழங்கி உமது பேரின்ப ஒளியில் மகிமைப்படுத்தியருள வேண்டும் என்று இரந்து மன்றாடுகின்றோம்.

அன்புடனும் அழியா நினைவுகளுடனும்
குடும்பத்தினர்.

பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

AD 15

## 31ம் நாள் நினைவலைகள்

மண்ணில் 30 05 1946



விண்ணில் 16 02 2020

அமரர்

**அருட்பிரகாசம் பத்திநாதர்**

" உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

பாசப்பிணைப்பால் அனைவரையும் புன்னகை புரிந்த முகத்துடன் அரவணைத்து அன்பு மழை பொழிந்த எம் தந்தை மின்னல் ஒரு கணத்தில் மின்னிட்டு மறைவது போல கண்ணெதிரே நாம் கண்ட காட்சி தெய்வம் நீங்கள் மறைந்ததென்ன? பப்பா நீங்கள் விண்ணுலகத்தில் நித்திய இளைப்பாறுதல் பெற என்றும் இறை வேண்டுதல் புரிகின்றோம்.

ஞானப்பிரகாசம் வீதி,
மல்வம்,
உடுவில்.

இவரின் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

AD 20

# யாழ் ரத்னா விருது 2020



யாழ்ப்பாணப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவானது யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் 25-02-2020 அன்று கொண்டாடப்பட்டபோது அருள் தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அடிகள் யாழ் ரத்னா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 'சாதனை படைக்கும் யோனத்தன்' என்னும் இவரது மொழி பெயர்ப்பு நாவலுக்காகவும் இவரது ஏனைய இலக்கியப் பணிக்காகவும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. அருள்தந்தை அவர்கள் கவிதை, சிறுகதை, இலக்கியக் கட்டுரை, மொழி பெயர்ப்பு போன்றவற்றில் ஈடுபட்டு வந்துள்ளமையை பாதுகாவலன் வாசகர்கள் அறிவர். அவருக்குப் பாதுகாவலன் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

## சிறந்த சமூக சேவையாளர் விருது பெறும் பொது நிலையினர்



திரு. யோ. வி. ஜீவறாஜா சிறந்த சமூகசேவையாளர் என யாழ்ப்பாண பிரதேச செயலக முதியோர் சங்கத்தினால் 15.02.2020ல் பிரதேச செயலாளரால் கௌரவிக்கப்பட்டார். இவர் புனித மரியன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவரும் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவருமாவார். இன்னும் இவர் சமய சமூக செயற்பாட்டாளரும் யாழ்ப்பாணம் மத்தியஸ்தர் சபை உறுப்பினரும் J/75 பிரிவு சிவில் பாதுகாப்புக் குழுத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாவார்.

## உங்களை நினைக்கின்றோம் செபிக்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவாக 1995ம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு பத்தே மாதங்கள் குருவாக வாழ்ந்து அவ்வாண்டு இடம்பெற்ற யாழ் குடா நாட்டு இடம் பெயர்வின்போது மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து அகதி முகாமில் வாழும்போது நோய்வாய்ப்பட்டு மரணித்த அருட்பணி க.ஜோண் லொறட் அடிகளாரின் குருத்துவ அருட்பொழிவின் வெள்ளிவிழா ஆண்டில் அவருடைய ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுகின்றோம்.



அமரர் அருட்பணி.
க. ஜோண் லொறட்

## சுகயீனமுற்றுள்ள திருத்தந்தைக்காக செபிப்போம்

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த சில தினங்களாக சுகயீனமுற்று சிகிச்சை பெற்று வருகின்றார். அவருக்காக எமது செபங்களில் விஷேடமாக செபிக்குமாறு இறை மக்களாகிய நாம் கேட்கப்பட்டுள்ளோம்.

கடந்த விபூதிப்புதனன்று திருப்பலி ஒப்புக்கொடுத்த திருத்தந்தை அதற்குப் பின்னரான எந்த ஒரு பொது நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவில்லையென வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன இதேவேளை அவர் தனது இருப்பிடமான புனித மார்த்தா இல்லத்தில் தங்கியிருந்து தவக்காலத் தியானத்தில் ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால திருத்தல திருவிழா
## 11.03.2020 - 14.03.2020

*பாலைதீவு புனித அந்தோனியார் தவக்கால திருயாத்திரைத் திருத்தல திருவிழா எதிர்வரும் 11.03.2020 புதன்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14.03.2020 சனிக்கிழமை காலை திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுபெறும்.*

11.03.2020 - மாலை 5.00 மணி திருச்செபமாலை - கொடியேற்றம் - திருப்பலி
12.03.2020 - மாலை 5.00 மணி திருச்செபமாலை - திருச்சிலுப்பாதைத் தியானம் திருப்பலி
13.03.2020 - மாலை 5.00 மணி திருச்செபமாலை - திருப்பலி - நற்கருணை வழிபாடு
14.03.2020 - *முதல் திருப்பலி - காலை 05.30 மணி*
*திருவிழாத் திருப்பலி - காலை 06.45 மணி*

(யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் *அருட்பணி. ப.யோ. ஜெபரட்ணம்* அடிகளாரின் தலைமையில் புனிதரின் பவனியும் திருச்சொரூப ஆசீரும்)

**யாத்திரிகர்களின் கனிவான கவனத்திற்கு**

- கடல் வழிப்பயணத்தின் போது அனைவரும் பாதுகாப்புக் கவசங்களை எடுத்துச் செல்லவேண்டும்
- சிறிய படகுகளில் ஒன்பது (9) பேருக்குக் குறைவானவர்களே பயணிக்கவேண்டும்
- *ஆயரின் பணிப்பின்பேரில் இறைமக்கள் பெருவிழாவின் (14.03.2020) அன்றைய தினமே தீவிலிருந்து தம் சொந்த இடங்களுக்கு மாலை 5.00 மணிக்கு முன்னர் திரும்பி விடவேண்டும்.*

## கல்வியியலில் முதுமாணிப் பட்டம் பெறும் திருநிலையினர்



பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (04.03.2020) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அருட்பணி.ம. அன்ரன் அமலதாஸ், அருட்பணி R.G. விஜின்ரஸ், அருட்சகோதரி. மேரி றொசாந்தி AC , அருட்சகோதரி. மேரி நிறஞ்சலி AC ஆகியோர் Isles University UK/Eu, Business University Costa Rica பல்கலைக் கழகத்தின் முதுகல்விமாணிப் (M.Ed) பட்டத்தை பெற்றனர்.

## ஊறணிப் பங்கு இளையோருக்கான ஒன்றுகூடல்



ஊறணிப் பங்கு இளையோருக்கான ஒன்றுகூடல் 15.02.2020 சனிக்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு வளலாய், அந்தோனியார்புரம் புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்திரு T.E. தேவராஜன் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் 50ற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.



குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 98 பிள்ளைகளுக்கு ஆயர் அவர்களினால் கடந்த 29.02.2020 அன்று உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது.

## மறைமாவட்டக் குருக்களுக்கான தவக்காலத் தியானம்

யாழ்.மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத்தினால் வருடாவருடம் நடாத்தப்படும் தவக்காலத் தியானம் இம்மாதம் 12ம் திகதி சாட்டி புனித சித்தாத்திரை மாதா திருத்தலத்தில் நடைபெறுமென குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்பணி.A.F.பெனற் அடிகளார் அறிவித்துள்ளார்.

## பங்குகளில் தவக்காலத் தியானங்கள்

இந்தியாவிலிருந்து வருகை தரும் அருட்தந்தை சுரேஷ் குழுவினரால் நடாத்தப்படும் தவக்காலத் தியானங்கள் மார்ச் மாதம் 23ம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 4ம் திகதி வரை யாழ்.மறைமாவட்டத்தில் வெவ்வேறு பங்குகளில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தியானங்கள் நடைபெறும் இடங்கள், நேரங்கள் பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படுமென குருமுதல்வர் தெரிவிக்கின்றார்.

## தவக்காலத்தில் மனமாற்றத்திற்கான 3 நாட்கள் தியானம்
## மார்ச் 20, 21, 22 திகதிகளில்

மனமாற்றத்தின் வழிகளை கிறிஸ்துவின் பாடுகளோடு இணைந்து தியானிக்கும் முகமாக மூன்று நாட்கள் தியானம் மார்ச் மாதம் 20, 21, 22 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள இறைதியான இல்ல மண்டபத்தில் நடைபெறும்.

இந்தியா டிவைன் தியான மையத்தைச் சேர்ந்த அருட்தந்தை ரபாயேல் கூத்தூர் குழுவினரால் இத்தியானம் வழிநடத்தப்படும். திருச்செபமாலை, தியான உரைகள், பாவசங்கீர்த்தனம், திருச்சிலுவைப்பாதை, திருப்பலி, விடுதலை செபங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நடைபெறவுள்ள இத்தியானத்தில் பங்குபற்றி பயனடையுமாறு யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையிலான இறைதியானக் குழுவினர் அன்புடன் அழைக்கின்றார்கள். தியானங்கள் தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு மார்ச் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.